Registered as a Newspaper in Sri Lanka

# ஈழமுரசு

முரசு 2 16-6-1985 ஞாயிற்றுக்கிழமை (ஆனி 2 நம்மூரான் 26) முழக்கம் 131

## இலங்கை இந்திய குழுக்கள் நான்கு நாட்கள் பேச்சு நடத்தும்

ஈழமுரசு நேற்று அறிவித்ததுபோல இலங்கைச் சட்ட நிபுணர்கள் குழு நேற்று பிற்பகல் இந்திய அட்டர்னி ஜெனரல் திரு. பராசரன் தலைமையிலான குழுவுடன் தமது பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர். சுமார் நான்கு நாட்களுக்குப் பேச்சுவார்த்தை தொடரக்கூடும். இருதரப்பினரும் எதை எதைப் பேசுவது என்பதை நேற்றுத் தீர்மானித்ததாக தெரிகின்றது. பேச்சு வார்த்தைகளின் முடிவில் அறிக்கையொன்று விடப்படலாமென இலங்கைக் குழுப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். நேற்றைய பேச்சுக்கள்பற்றி இருதரப்பினரும் கருத்துக்கள் வெளியிட மறுத்துவிட்டனர்.

# இலங்கைப் பிரச்சினையை ராஜீய வழி மூலமே இந்தியா தீர்க்குமென ராஜீவ் காந்தி அறிவிப்பு!

''இலங்கைத் தமிழர் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பாரதம் இராணுவ ரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாது'' என அமெரிக்க விஜயத்தின்போது வாஷிங்டனில் உரையாற்றும்போது பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவுவதற்காக ராஜீய நடவடிக்கையால் மட்டுமே பாரதம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதெனவும் தெளிவாக அவர் கூறினார். பாரதம் எந்தத் துறையிலும் சுதந்திரமாக இருந்து தனக்குச் சரி என்பதையே செய்யுமெனவும் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி பெருந்தொகையான பத்திரிகையாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது பாரதத்திற்கும் அமெரிக்காவிற்குமிடையில் ஆயுதக் கொள்வனவு சம்பந்தமான ஆயுதபேரம் எதுவும் உருவாகவில்லையெனக் குறிப்பிட்டுள்ளார். ''பேரம் எதுவும் பேசுவதற்காக நாங்கள் இங்கு வரவில்லை'' எனவும் தெரிவித்தார்.

# வார இறுதிக்குள் 'போர் நிறுத்த' அறிவித்தல் வரும்!

## ஓரிரு தினங்களில் ராஜீவும் ஜனாதிபதியும் தொலைபேசியில் பல விடயங்கள் பேசுவர்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சுமுகமான முடிவு காண்பதன் முதல் கட்ட நடவடிக்கையாக இருபக்கத்தினதும் 'போர் நிறுத்த' அறிவித்தல் இவ்வார இறுதிக்குள் உத்தியோகபூர்வமாக வெளிவரலாமென பிந்திக் கிடைத்த நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஓரிரு தினங்களுக்குள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும், ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சில முக்கிய விடயங்கள்பற்றி ஆராய்ந்த பின்னர் இந்த அறிவிப்பு வெளியாகலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கவும் தாம் தயாராகவிருப்பதாக இந்திய விஜய இறுதியில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா குறிப்பிட்டது தெரிந்தது.

இரு நாட்டுத் தலைவர்களும் இம்மாத முற்பகுதியில் புதுடில்லியில் நடத்திய அந்தரங்கப் பேச்சுவார்த்தையின் ஒரு முக்கிய அம்சமாகவே 'போர் நிறுத்த' அறிவிப்பு வெளிவரவிருப்பதாகவும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## கூட்டணியின் தலைவர்கள் அடுத்த வாரம் வருவர்

சென்னையில் தற்போது தங்கியிருக்கும் கூட்டணியின் முக்கிய தலைவர்கள் அடுத்த வார நடுப்பகுதியில் கொழும்பு திரும்புவார்கள்.

இவ் வார பிற்பகுதியில் இவர்கள் புதுடில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியையும், திரு. ஜி. பார்த்தசாரதியையும் சந்திக்கவிருப்பதாக 'இந்து' பத்திரிகை இரு தினங்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது.

அனேகமாக இவர்கள் இச் சந்திப்பை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய நம், தாமதமின்றி கொழும்பிற்குப் புறப்படலாமென சென்னையிலிருந்து நேற்றுக் கிடைத்த தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

## தவறுதலான சம்பவத்தில் மூன்றுபேர் சூடுபட்டு மரணம்

ஏறாவூர் பெரியகிலாவடியல் நடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற சம்பவமொன்றில் முன்னாள் பொலிஸ் வீரர் ஒருவரும் இரண்டு தீவிரவாதிகளும கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுளளது.

இக் கிராமத்திற்குள் புகுந்த 15 பேர் கொண்ட தீவிரவாதிகள் கோஷ்டி ஒன்று முதியான்சே என்னும் கிராமவாசியைப் பிடித்து அவர் மூலம் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் வேதப்பெருமாளின் வீட்டை அறிந்து அவரைக் கடத்திச் சென்றார்களாம்.

வேதப்பெருமாளைக் கொண்டுவந்து அவரைச் சுட்டுக் கொல்வதற்கு தீவிரவாதிகள் குழு தயாரான போது, அவர்களுடன் சேர்ந்து கொல்வதாக ஏற்கனவே அறிவித்திருந்த மற்றும் இரண்டு தீவிரவாதிகள் அவ்விடம் வந்ததாகவும், அடையாளம் தெரியாது பதற்றமடைந்து தீவிரவாதிகள் குழு துப்பாக்கி பிரயோகம் செய்ததில், இரு தீவிரவாதிகளும், முன்னாள் பொலிஸ் வீரரும் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

## உதவி அரசாங்க அதிபரின் ஜீப் கடத்தப்பட்டது

மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் சென்றுகொண்டிருந்த ஜீப் ஒன்று கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக

- 8 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் முகாம் பிடிபட்டதாக அரசு அறிவிப்பு:

# மன்னாரில் 18 பேர் சுட்டுக் கொலை; இருபது பேர் காயமடைந்தனராம்!

(மன்னார்)

மன்னார்ப் பகுதியில் உள்ள தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் முகாமொன்றை பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்துத் தாக்கியதில் அங்கிருந்த பதினெட்டுத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் இருபது பேர் காயமடைந்ததாகவும் அரசாங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்து இருபத்தி ஏழு றைபிள்கள், பத்தாயிரம் தடவைகள் சுடக்கூடிய வெடிமருந்துகள், இருபத்லைந்து ரைக்கட்டுகள் உட்பட பெருமளவு வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

----8 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் மற்றொரு சம்பவம்

மன்னாரில் நேற்று இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த மூவர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

மன்னாரில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மறைவிடம் ஒன்று நேற்று மாலை தாக்கப்பட்டதில் கொல்லப்பட்ட காயமடைந்த அனைவருமே அநுராதபுரத்தில் சென்ற

... 8ஆம் பக்கம் பார்க்க

## உதயத்துக்கு முன் ஐவர் கைது!

(அரியாலை)

அரியாலை பகுதியில் நேற்று உதயத்துக்கு முன்னர் நடை

...8 ஆம் பக்கம் பார்க்க

# மாநகர தீயணைக்கும் இயந்திரம் நேற்று மாலை வந்து சேர்ந்தது!

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்திற்கென பதினெட்டு லட்சத்து நாற்பதாயிரம் ரூபா செலவில் இறக்குமதி செய்யப்பட்ட தீயணைக்கும் இயந்திரம் நேற்று மாலை பாதுகாப்பாக யாழ்ப்பாணம் கொண்டுவரப் பட்டது.

கனடிய அரசாங்கத்தின் அன்பளிப்பாகக் கிடைத்த இவ் இயந்திரம், கடந்த பெப்ரவரி மாதமே கொழும்பு வந்து சேர்ந்த போதிலும், பாது

—8-ஆம் பக்கம் பார்க்க

## சூடுபட்டு படுகாயம்

(கிளிநொச்சி)

நேற்று பிற்பகல் கிளிநொச்சி கரடிபோக்கில் ஆசி

—8-ஆம் பக்கம் பார்க்க

## பரந்தன் கூ. சங்க ஊழியர் தற்போது வேலை நிறுத்தம்

(பரந்தன்)

பரந்தன் கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்தில் அடிக்கடி இடம்பெற்று வரும் கொள்ளைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக சங்கத்தின் ஊழியர்கள் அனைவரும் வெள்ளி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக சங்கத்தின் கிளைகள் யாவும் பூட்டப்

... 8ஆம் பக்கம் பார்க்க

பரி. யோவான் விழாவில் உரை

## 'நற்பிரஜைகளை உருவாக்கும் பாரிய பணி ஆசிரியரினது'

(நல்லூர்)

"மாணவர்களின் கல்விமுன்னேற்றத்தைமனதில் கொண்டு பணி புரியும் ஆசிரியர்களை மாணவர்களால் என்றும் மறக்கப்படமாட்டார்கள். மாணவர்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி அவர்களுக்கு கல்வி போதிப்பது ஆசிரியர்களது தலையாய கடமையாகும். நாட்டுக்கு நல்ல பிரஜைகளை உருவாக்கி அளிக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களுடையதாகும்."

இவ்வாறு பரி. யோவான் கல்லூரியில் 24 ஆண்டுகள் ஆசிரியையாகப் பணிபுரிந்து சேவையிலிருந்து இளைப்பாறும் ஆசிரியை திருமதி; ஜி. வரராஜசிங்கத்திற்கு கல்லூரி ஆசிரியர் குழுவால் அளிக்கப்பட்ட பிரிவுபசார தேனீர் விருந்திற்குத் தலைமை வகித்த ஆசிரியர் குழுத் தலைவர் திரு. கே. கணேசலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்;

ஆசிரியர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் பேசுகையில் "ஒரு நல்லாசிரியருக்கு இருக்க வேண்டிய அன்பு, பண்பு, கடமையுணர்வு என்ற கோட்பாடுகளைக் கொண்டஆசிரியையாக திருமதி வரராஜசிங்கம் கடமையாற்றினார். தான் கற்பித்த பிள்ளைகளின் கல்வியில் மட்டுமல்ல, அவர்களின் குடும்பம், சுற்றுடல் என்பவற்றில் கூட கவனம் செலுத்தும் ஆசிரியையாகப் பணி புரிந்தார்; பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக விளங்கிய இவர் ஆசிரியைகளுக்கு முன்மாதிரியாகவும், பிள்ளைகளுக்கு வழி காட்டியாகவும் தனது கடமைக்காலத்தில் பணிபுரிந்துள்ளார். இவரது சேவை என்றும் மறக்க முடியாததாகும்" என்று குறிப்பிட்டார்.

திருமதி வரராஜசிங்கம் தனக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

### ஐந்து கால் பசுக் கன்று

(கல்வியங்காடு)

நல்லூர் முத்தவி நாயகர் வீதியில் உள்ள திரு. சி. கந்தசாமி என்பவரது வீட்டில் உள்ள பசுமாடு ஒன்று ஐந்து கால்களுடன் கூடிய கன்று ஒன்றை ஈன்றெடுத்திருக்கிறது; முன்புறம் இரண்டு கால்களும் நடுவில் இரண்டு கால்களும் பின்புறம் ஒரு காலுமாக காணப்படும் இந்தக் கன்று முழு வளர்ச்சியுடன் இருந்த போதிலும் எழுந்து நிற்க முடியாதுள்ளது.

### மின் கசிவினால் விளைந்த விபரீதம்

(நீர்வேலி)

நீர்வேலி மேற்கில் சட்ட விரோதமாக மின் இணைப்பு ஏற்படுத்தப்பட்ட ஓர் வீட்டில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக ஒருவர் பலத்த காயத்திற்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றொருவர் சிறு காயங்களுடன் தப்பிவிட்டார்.

### வேலணையில் சைவ சேவா சங்கம் உதயம்

(யாழ்ப்பாணம்)

"சைவாலயங்களில் அமைதியும், ஒழுக்கமும் வலுப்பெற வேண்டும். மாணவர்களுக்கு திருமுறைப் பாடல்கள் உரிய விதத்தில் போதிக்கப்பட வேண்டும்" என்று வேலணை மேற்கு குருக்கள் ஆதீன மடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட சைவ சேவா சங்க ஆரம்பக் கூட்டத்தில் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் பேசுகையில் கூறினார்.

மேற்படிச் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: சிவஸ்ரீ. கை. திருஞானசம்பந்தக் குருக்கள், துணைத்தலைவர்கள்; சங்கீதபூஷணம் வே. சந்திரசேகரம், திரு. நா. வீரசிங்கம் செயலாளர்; திரு. ப. பாலசுப்பிரமணியம் துணைச் செயலாளர்: திரு. ஐ. தனபாலசிங்கம், பொருளாளர்: திரு செ. தேவராஜா ஒன்பது பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவானது.

### உற்சவங்கள்

(நவாலி)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் என வழங்கும் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் தேர் உற்சவம் இம் மாதம் 17-ம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க




✲ மிருசுவில் படித்த மகளிர் திட்டம், நவரத்தினம் - புஷ்பராணி தம்பதிகளின் மகன் வேணுகாணன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ பாஷையூர் மகேந்திரபுரம் அருள்தாஸ் தங்கம் தம்பதிகளின் மகன் ரெஜின் ஜெனுல்ட் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ நல்லூர் ஆடியபாத வீதி, தியாகராஜா- புனிதவதி தம்பதிகளின் மகள் ஜனனி இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ பருத்தித்துறை ஓடக்கரை நவரட்ணராஜா -செல்வராணி தம்பதிகளின் மகன் பால்ராஜ் இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ திருநெல்வேலி ஆடியபாத வீதி, பாலசுந்தரம்-கோகிலாம்பாள் தம்பதிகளின் புதல்வி றஜிலா இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ யாழ் - கொழும்புத்துறை வீதி, இராஜசூரியர் - இந்திராணி தம்பதிகளின் மகள் வற்சலா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## வரி விளம்பரம்

### மல்லிகை

தவறாமல் படிக்க வேண்டிய ஓர் ஈழத்து மாசிகை. ஜுன் இதழ் வெளிவந்து விட்டது. 224 B, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

சுண்டுக்குளி காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் நவீன வசதிகளுடன் இலக்கம் 34 A வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: முத்தையா, இலக்கம் 4, பேரின்பநாயகம் ஒழுங்கை, சுண்டுக்குளி.

### ஏலவிற்பனை

இன்று காலையிலிருந்து பலவித பொருட்கள் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுச் சந்தைக் கட்டிடத்தில் விற்பனையாகும். உங்களிடம் விற்பனைக்கு இருக்கும் பொருட்களையும் அனுப்பி வைக்கலாம். ஏலவிற்பனை நிலையம், கோப்பாய்.

### தவறிவிட்டது

சுப்பிரமணியம் தங்கராத்தினம் ஆனந்தமாவத்தை உணுப்பிட்டி வத்தளை என்பவருடைய அடையாள அட்டையும், போட்டோக்களும் சிவப்பு பேர்ஸுடன் யாழ். அரசினர் வைத்தியசாலை எக்சிமா கிளினிக்கில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து A நாகலிங்கம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி உதவுக.

### தவறிவிட்டது

9-6-85 அன்று கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றில் ரவலிங் பாக் ஒன்று கோப்பாய் சந்திக்கும் பனைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழமுரசுக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

உங்கள் முதலீட்டு வளர்ச்சியில் அக்கறை கொண்டு அபிமானம் பெற்ற

# தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினர் வழங்கும்

# மேலும் ஒரு சலுகை!

இதுவரை மாதாந்த வட்டி பெறுவோருக்கு வழங்கி வந்த 25% வீதவட்டி 30% வீதமாக

# அதிகரிக்கப்பட்டுள்ளது!


## தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினரின்

தனித்துவமான 36% வட்டி முதிர்வுநிலை வைப்புகளுக்கு வழமைபோல் நீங்கள் பெறலாம்

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்

## தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437




# பாடு தமிழ் வளர்த்த கூடல் மதுரையம்பதி

'பொய்யாக் குலக் கொடியாம் வையை ஆறு'' வளஞ்சுரந்தூட்ட, 'பொய்யா வானம் புதுப்பெயல் பொழியத் தென்னவனத்தோர், செவ்விதிற் புறந்த செழும்பதியாம், மதுரை மூதூர். இப்பதி தொன்று தொட்டு தமிழ்ப் புலவரும், புரவலரும் ஒருங்கு கூடி உரையாடி, தாமின்புறுவது உலகு இன்புறக்கண்டு, காமுறுதற்கு இயைந்த இடமாதலின் கூடல் எனும் பெயர் பெற்று விளங்கியது.

பாரதநாட்டில், பாலாற்றங்கரை நாகரிகமும், காவிரிக் கரை நாகரிகமும், வைகைக் கரை நாகரிகமும் முறையே தொண்டைநாடு சோழநாடு, பாண்டியநாடு ஆகியவற்றின் உயர்வினை எடுத்து இயம்புவன. வைகைக்கரை நாகரிகம் காலத்தால் மூத்தது.

பாண்டி நாட்டு மக்களின் குலதெய்வம் மதுரை மீனாட்சியாகும். அம்மை கயற்கண்ணையுடையவள். கயற் கண்ணே பாண்டிய நாட்டின் இலச்சினை. பாண்டியர் கொடியில் மீன் உருவமே தீட்டப்பட்டுள்ளது. சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் எடுத்து ஓதும் கிளியே அம்மையின் பட்சி. கதம்பையே அவளது விருட்சம்.

'மதுகரம் வாய் மடுக்குங் குழற்காடேந்து மிள வஞ்சிக் கொடியாம்', மீனாட்சி, சுந்தரேஸ்வரப் பெருமானாகிய சிவபிரானைத் திருமணம் செய்த இடம், திருத்தலம் மதுராபுரியாகும். இறைவனதும், இறைவியினதும் உறைவிடம் நான்மாடக் கூடல்.

பண்டைக் காலம் தொடக்கம் ''எண்டிசையும் புகழத்'' தமிழ் வளம் வளர்த்த பெருமை பெற்றிருந்த மதுரைப்பதி தமிழ் கெழு கூடல் எனவும் பாடு தமிழ் வளர்த்த கூடல் எனவும் புறநானூற்றில் வர்ணிக்கப் பட்டுள்ளது. இதனை நான்மாடக்கூடல் எனப் போற்றும் பரிபாடல் யின்...... குன்றமர்ந்து உறைதலும் உரியன்' எனக் கூறுவதும் நோக்கத்தக்கது.

'பதியெழு அறியாப்பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்' என மதுரையை அறிமுகம் செய்யும் தண்டமிழ்க் காப்பியம், சிலப்பதிகாரம் இந்நகரத்தை மதுரைமூதூர், ஓங்குசீர் மதுரை தென்தமிழ் நன்னாட்டுத் தீது தீர் மதுரை, மணிமதுரை எனும் பல சொற்றொடர்களால் விபரிக்கின்றது. மணிவாசகப் பெருமான் மதுரைப் பெரு நன்மாநகர் எனத் திருவாசகத்தில் கூறுவார்.

பேராசிரியர் ப. சந்திரசேகரம்
கல்வித்துறை, யாழ். பல்கலைக்கழகம்

மதுரையில் திருமருதற்துறை என ஒரு துறை இருந்ததாகக் கூறுவதைக் காண்கின்றோம். இது திருமருதம்துறை எனவும் வர்ணிக்கப்பட்டது. வைகை ஆற்றின் துறை எனும் கருத்துப்பட ''வரு புனல் வைகை மருதோங்குமுன் துறை'' எனப்பரிபாடல்கூறும். மதுரையில் பள்ளி கொண்டிருக்கும் முருகப் பெருமான் கோவிலையிட்டு திருமுருகாற்றுப் படையில் கூற வந்த பெரும் தமிழ்ப்புலவர் நக்கீரர் ''மாடமலி மறுகின் கூடல் குடவ திருவிளையாடற்புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர் ''திக்கெலாம் புகழ் மதுரை' என அருமைத் திருவாக்கால் அழகாக மதுரையையிட்டுச் செப்பியுள்ளார்.

மதுரையில் வாழும் நகரின் பாணியோடு ஒட்டி வாழுகின்ற மக்கள் கொள்ளும் கருத்தும் சிந்தனைக்குரியது. மதுரை அவர்களால் மருதை எனக் குறிப்பிடப்படுகிறது. மருதமரம் நிறைந்த ஊர் மருதை எனக் கொள்ளப்பட்டது. இது ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாகும்.

மதுரை மாநகரம், கடந்த 2500 ஆண்டுகளாக திராவிடப் பண்பாட்டின் சிகரமாக விளங்கி வருகின்றது. இது கி.மு ஐந்தாம் நூற்றாண்டு தொடக்கமே பல மேற்கத்திய கீழைத்தேய நாடுகளோடு தொடர்புள்ள துறைமுகத்தினைக் கொண்டு விளங்கிற்று. மெகஸ் தெனிஸ் எனும் கிரேக்க அறிஞர் கி.மு 320ம் ஆண்டிலேயே இதனையிட்டுக் குறிப்பிட்டுள்ளார். கிரேக்க நாட்டோடு இருந்த தொடர்பினைக் கொண்டு, மெடிற்றரேனியன் தொழிற்பட்டை என இந்நகரம் விபரிக்கப்பட்டுள்ளது. கிரேக்க நாட்டுக் கல்வித் திருநகராகிய அதென்ஸ் நகரம் போன்று இறைவளமும் கல்வி வளமும், கலை வளமும் கொண்டு விளங்கியதையொட்டி மதுரை தென் பாரதத்தின் அதென்ஸ் என்றும் கொள்ளப்பட்டது. மதுரையைத் தன்னகத்தே கொண்ட பாண்டி நாடு, கிழக்கு நாடுகளோடும் மேற்கு நாடுகளோடும் கடல் வாணிபம் செய்து வந்தமைக்கு புறநானூறு சான்று பகரும்.

தமிழகத்தைப் பல நூற்றாண்டுகளாக ஆண்டு வந்த மன்னர்களுள் சங்கம் நிறுவித் தமிழ் ஆராய்ந்த பெருமையுடையவர்கள் பாண்டியர். பெரும் புலவர் பலர் தாம் எழுதிய நூல்களை மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு கொண்டு சென்று அரங்கேற்றலே மரபாகவிருந்தது. பாண்டியரும், பைந்தமிழும் இணைந்து வளர்ந்த காலம் சங்க காலமெனக் கொள்ளப்படுகின்றது.

1529 ஆம் ஆண்டில் விஸ்வநாத நாயக்கர் மதுரையில் தங்கி, மதுரை நாடு ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாக, நாயக்கர் ஆட்சியில் கொண்டு வரப்பட்டது.

இந்த நாயக்கர் காலத்தில் தான் தற்போதைய மதுரை மாநகரம் உருவாகிற்று. இக்காலத்தில் இரண்டாம் கம்பண்ணர் எனும் மன்னர் முஸ்லிம்களால் சிதைக்கப்பட்ட அம்மன் கோயிலை புனருத்தாரணம் செய்து, கோபுரங்களைப் புதுப்பித்தார்.

திருமலை நாயக்கர் மன்னன் கோயிலில் பல திருப்பணிகள் செய்த சிறப்புக்குரியவர். அவரே மதுரை மீனாட்சி அம்மன் சந்நிதானத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைச் சிற்பங்கள் மலிந்து விளங்கும் கவின் மிகுந்த புது மண்டபமும், மதுரையில் ஒப்புயர்வற்று காட்சியளிக்கும் தெப்பக்குளமும் அமைத்தவர். இத்தெப்பக்குளத்திலேயே மீனாட்சி அம்மன் சுந்தரேஸ்வரர் தீர்த்தோற்சவம் நடைபெறும். வைகை ஆற்றின் நீர் இங்கு குழாய்களின் மூலம் வாரி இறைக்கப்படும். பல்லாயிரக் கணக்கான மக்கள் இத்தீர்த்தத்தில் நீராடி மகிழ்வர்.

1812 ஆம் ஆண்டில் பீற்றர் றவுஸ் எனும் ஆங்கில மாவட்ட அதிகாரி சகதியின் அருளால் ஆட்கொள்ளப்பட்டு கோயிலின் ஒரு பகுதியைக் கட்டினார் என்பது வரலாறு. இதற்குச் சான்றாக பீற்றர் பாண்டியன் அமமானை எனும் நூலும் உண்டு.

மதுரையை ஆண்ட தடாதகை எனும் பாண்டிய அரசி வீரம் செறிந்தவள். வடநாட்டில் பல நாடுகளைக் கைப்பற்றிய வீராங்கனை, வடநாட்டின் எல்லையை அடைந்து கைலாசமலையில், சிவனோடு நேர் சமர் புரிந்து அவரால் ஆட்கொள்ளப்பட்டவள்.

இதன் விளைவாக, இறைவன் சுந்தரபாண்டியனாக வந்து, தடாதகையை மணம் செய்தார். சுந்தரபாண்டியனும், தடாதகையும் தெய்வீகம் பெற்று, சுந்தரேஸ்வரனாக, மீனாட்சி அம்மையாக உருவெடுத்தார்கள்.

காசியிலே நீராடி மதுரையிலே குங்குமமிட்டு, காஞ்சியிலே தவம் செய்பவள் பராசக்தி. காசியிலே விசாலாட்சியாகவும், மதுரையிலே மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும் விளங்கும் அன்னை அவள்.

பங்குனி மாதத்தில் உத்தர நாள் முழுமதி நிலவு பொழி

—7-ம் பக்கம் பார்க்க

# உங்களுக்கு.... ஏன் நரையில்லை?

அது ஒரு நடுகல்.

உறையூரிலிருந்து அரசு புரிந்து வடக்கிருந்து உயிர் நீத்த கோப்பெருஞ் சோழனுக்காக நட்டப்பட்டது.

அந்த நடுகல்லைச்சுற்றி எமது பார்வையை வீசுகின்ற பொழுது சான்றோர் பல வீற்றிருந்துஉரையாடுவது தெரிகின்றது. (தமிழாராய்ச்சி மகாநாட்டு நடுகல்லை ஞாபகப் படுத்துங்கள்)

அச்சான்றோர் குழுவில் ஒருவர் மிகுந்த மனச் சோர்வுடன் உள்ளம் வெதும்பிய நிலையில் நடுநாயகமாக வீற்றிருக்கின்றார்.

அவர் பிசிர்' என்னும் ஊரைச் சேர்ந்த பிசிராந்தையார். பிசிராந்தையார்– கோப்பெருஞ்சோழன் இருவரும் நெருங்கிய நண்பர்கள். ஒத்த கருத்தினையும் ஒத்த உணர்வினையும் உடையவர்கள்.

இருவருடைய நட்புணர்ச்சிகள் தாமே மிக்கு ஒருவரொருவர் தம் பெயரைக் கூறுமிடத்து தத்தம் நண்பர் பெயரை இணைத்துக் கூறிக்கொள்ளும் அளவில் சிறந்து நின்றன.

கோப்பெருஞ் சோழன் வடக்கிருக்கப் புக்கபோது சான்றோர் பலர் அவனுடன் வடக்கிருப்பாராயினர். அந்நேரம் பிசிராந்தையாரை நினைக்கிறான் சோழன். நட்புணர்வின் பிரதிபலிப்பு உந்த பிசிராந்தையாரும 'பிசிர்' ஐ விட்டு உறையூர் வருகின்றார் சோழனைக்காண.

வருமுன்னமே வடக்கிருந்து உயிர் நீத்து விட்டான் சோழன். பிசிராந்தையார் மனம் சோர்ந்து வருந்துகின்றார்.

புலவர் அல்லவா! துக்கத்தை மறைத்து தெளிந்த உணர்வினராய் கோப்பெருஞ் சோழனது குணநலன்களை சான்றோருடன் பேசி அளவளாவிக் கொண்டிருக்கிறார். (இதனைத்தான் நாம் முன்னர் பார்வை வீச்சால் அறிந்தது.) சில சான்றோர் பிசிராந்தையாரை நோக்கி ''சான்றீர்! யாங்கள் உங்களை நெடுங்காலமாகக் கேள்வியுற்றிரும; உங்கள் வாழ்நாளும பலவாயினவே; இதனை நோக்க உங்களுக்கு நரை உளவாக வேண்டும்; ஆனால், உங்களுக்கு ஏன் நரையில்லை? என வினவுகின்றனர்.

அதற்கு அவர், நரைதிரைகட்குக் காரணம் முதுமையன்று; மனக்கவலையே; எனக்குக் கவலை கிடையாது; அதற்குக் காரணம் என் குடியிலோ ஊரிலோ நாட்டிலோ கவலையுண்டாதற்குரிய நிலைகள் இல்லை.

என்குடியில் என்மனைவி மக்கள் அறிவு நிரம்பியவர்கள்; என் ஏவலர் என் குறிப்புப் பிழையாது ஒழுகுபவர்; எங்கள் ஊரில் ஆன்றவிந்தடங்கிய கொள்கையுடைய சான்றோர் பலர் உளர்.

நாட்டு வேந்தனும் அறமல்லது செய்யான் எனப் பதிலளித்து எமது தன்நரையாமைக்குக் காரணம் கூறுகின்றார்.

''பிசிர்'' கருத்தை அடிப்படையாகக் கொண்டு 'நரை' பற்றி விளங்கினால் எமது நாட்டு மக்களுக்கு (அரசன் உட்பட) தலை நரையாமல் இருப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் தூரத்தில் கூட இல்லை எனலாம்.

இவர் கருத்தை விளக்கிக் கூறும் புறநானூற்றுச் செய்யுள் இதோ:

''யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.''

★ சபா. உதயகுமார்

# அனுபவம் வர வேண்டும்!

● வி. என் எஸ். உதயசந்திரன்

அன்று காலை நான் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி தனியார் பஸ்சில் புறப்பட்டேன். நான் பிரயாணம் செய்த பஸ்சில் நிறையப் பயணிகள் இருந்தனர். வெளிநாடு செல்வோர் பலரை அந்த பஸ்சில் காண முடிந்தது. சிலர் அவர்களை வழியனுப்புவதற்காக வந்து கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் பாஸ்போட் செய்வதற்காக வந்து கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் நீண்ட நாள் இடைவேளைக்கு பின்னர் வேலைக்குப்போவதற்காகவந்து கொண்டிருந்தார்கள்.

இவர்களை நான் உற்று நோக்குகின்றேன் எல்லோரது முகங்களிலும் மகிழ்ச்சியில்லை பயம் நிழலாடிக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. நீண்ட நேர அமைதிக்குப் பின்னர் பஸ்சிற்குள் ஒரு வயோதிபரின் குரல் கேட்கிறது... தங்கச்சி எங்க போறியள்?... கொழும்புக்கு போறன் என்று அந்தப் பெண் பதிலளித்தார். அந்தப் பெண்ணுக்கு சுமார் 35 வயது இருக்கும். அவர் கழுத்தில் அடுக்காக நகைகள் அணிந்து காணப்பட்டார்.

வயோதிபர் கதைக்கத் தொடங்கினர். தங்கச்சி நாடு இருக்கிற இந்த அவல நிலையில இந்த நகைகளை அடுக்கா போட்டுக் கொண்டு வாறீங்களே. உங்களுக்கு அறிவு கொஞ்சமும் இல்லையா. அந்தப் பெண் ஒன்றுமே கதைக்கவில்லை. நாங்கள் உயிரை கையில பிடிச்சுக் கொண்டு பிரயாணம் செய்யிறம். நீங்கள் என்னடா என்டா எங்கயோ ஊர் பாக்க போற ஆட்கள் மாதிரி வாறியள்.. ''நான் நகையளை போட்டுக் கொண்டு வரக் கூடாது எண்டு சொல்லயில்ல பிள்ளை, நாட்டு நிலைமைய அறிஞ்சு அதுக்கு ஏற்ற மாதிரி எங்களை நாங்கள் மாற்றிக் கொள்ள பழகவேணும்...''?

அந்த வயோதிபர் சொல்வது சரி என பலர் தலையசைத்தனர். பஸ் மதவாச்சியைத் தாண்டிக் கொண்டிருந்தது. திடீரென பல சத்தங்கள் கேட்டன. நான் ஒரு கணம் திகைத்து விட்டேன். என்னை திடப்படுத்திக் கொண்டு திரும்பிப் பார்த்தேன். பஸ் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு பல கருங்கற்கள் உள்ளே நுழைந்திருந்தன. பஸ்சில் பிரயாணம் செய்த பிரயாணிகள் காயப்படாமல் தெய்வாதீனமாக தப்பிவிட்

—7-ம் பக்கம் பார்க்க

## இவ்வாரக் கதையமுதம்

# அரையலங்காரத்தோடு அம்மன் சிரிக்கின்றாள்?

தீவுக்கரையின் கிழக்கே அமைந்த அழகிய கிராமம் தம்பாட்டி.

காலை ஆறு மணி. தம்பாட்டி முத்துமாரியம்மன் கலகலப்பில் குளித்துக் கொண்டிருந்தது.

அன்று ஒன்பதாந் திருவிழா.

கார்த்திகைப் பெண்களை நினைவூட்டும் கன்னிப் பெண்கள் குடமும் கையுமாய், முத்துமாரி அம்மன் கோயில் குளத்தருகே இருக்கும் நல்ல தண்ணீர்க் கிணறை முற்றுகை இட்டிருக்கின்றனர். பேச்சும், கேலியும் நாகரிகமாகப் பொறிபறக்கின்றன.

ஊரில் உள்ள நல்ல தண்ணீர்க் கிணறுகளில் தானும் ஒன்று என்ற பெருமையில் பூரித்து நிற்கின்றது குளத்தடிக் கிணறு. தம்பாட்டியின் அழகிய பெண்கள் எல்லோரும் தன்னை நாடி வருவதைக் கண்டு விருப்புக் கொண்டது அந்தக் கிணறு.

''எடியே......ஐயரம்மா. ஆளுக்கொரு குடம் தண்ணீர் கொண்டந்து ஊத்தச் சொன்னவ...'' கலகலப்பும், சலிப்பும் கலந்த குரலில் ஒரு 'மொட்டைப்' பெண் மற்றவர்களிடம் சொல்கிறாள்.

''அதுக்கென்ன...... கோயிலுக்குத் தானே......''

தம்பாட்டிப் பெண்களின் நற்குணத்திற்கு இது ஓர் உதாரணம்.

மங்கையர் வருவதும், போவதுமாய் கிணற்றடி கோலாகலமாகக் காட்சி அளித்தது.

அந்தச் சிறிய கடலின் மறுபக்கத்தில், சுமார் இருநூறு யார் தூரத்தில் காம்ப் அமைதியாகக் காட்சி அளித்தது.

காம்ப்பைப் பற்றி சிறிதும் கவலை கொள்ளாமல் தம்பாட்டி வாழ் மக்கள், சுறுசுறுப்பாகத் தங்கள் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

பயந்து என்ன செய்வது என்ற விரக்தியோ தெரியவில்லை!

கோவில் பிரசங்கியாரின் பக்கவாத்தியக்காரர்கள் வாயில் 'பிறஸ்சு'டன், கையில் கோவில் வாளியுடன், அதே கிணற்றடிக்கு வருகின்றனர்.

கிணற்றடியில் நின்ற பெண்கள், அவர்களை முகம் கழுவுவதற்கு விட்டு விட்டு ஒதுங்கி நிற்கின்றனர்.

தம்பாட்டிப் பெண்களின் நற்குணத்திற்கு இதுவுமோர் உதாரணம்!

நாலு குமருகள் கூடினால் பேச்சுக்குக் குறைவில்லை என்னும் அனுபவ மொழி தம்பாட்டி ஊரைப் பொறுத்த வரையில் பொய்யோ தெரியவில்லை!

ஆயினும், அன்று தம்பாட்டிக்கு, கோலாகலமான ஒரு நாள். பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் தங்கள் வீட்டு வேலைகளுக்கிடையில் கோயில் வேலைகளையும் பார்க்கின்றனர்.

மேளக் கோஷ்டியினர், கோயிலுக்கருகே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில், கடைந்தெடுக்கப்பட்ட 'வம்பு' வார்த்தைகளை அள்ளித் தெளித்துக்கொண்டிருந்தனர்.

ஸ்பீக்கர் 'மூர்த்தி', சங்கீதக் கசற்றுகளையே போட்டு, தன் சங்கீத ஞானத்தைப் பறை சாற்றிக் கொண்டிருந்தார்.

பெண்களில் பலர் கோவிலைக் கழுவிக் கொண்டிருந்தனர்.

அங்குள்ள தேநீர்க் கடையில், 'நய்ந்து' போன வாய்ப்பல், எல்லோர் பற்களையும் பதம் பார்த்துக் கொண்டிருந்தது!

கோயிலுக்கு முன் பல ஆண்கள் நின்று கொண்டு, அன்றைய திருவிழா ஆயத்தங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

வயது வித்தியாசமின்றி, பால் வித்தியாசமின்றி எல்லோரும் கோவிலை வளையவந்து கொண்டிருந்தனர்.

ஆம் – தம்பாட்டிக்கு அது ஒரு கோலாகலமான தினம்!

ஐயரம்மா வேலைக்காரச் சாமியாரை விரட்டிக் கொண்டு இருந்தா. சாமியார் முணு முணுத்துக் கொண்டே காரியத்தில் கண்ணானார்.

கோவில் தலைவர், நிகழ்ச்சி அமைப்பாளர், செயலாளர் அனைவரும் காலில் சில்லுப் பூட்டிக் கொண்டு திரிந்தனர்!

கதாப்பிரசங்கியார், மகா பாரதத்தின் இறுதிக்கட்டத்திற்கு தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருந்தார்;

பெண்கள் தொடர்ந்து தண்ணீர் அள்ளிக் கொண்டு தலையத் தலையச் சென்று கொண்டிருந்தனர்.



கால்கள் உற்சாகமாகத் தாளம் போட்டுச் சென்றன.

நில மகள் சிரிப்பது போல் ஒரு உணர்வு!

மங்கையரின் மென்கால்கள் பட்டு, அதனால் 'கிச்சு கிச்சு' மூட்டப்பட்டு நில மகள் சிரிக்கின்றாளோ என்னவோ!

அத்தனை கோலாகலம்.

அந்த காம்ப் அமைதியாகக் காட்சியளித்தது!

மாலை –6 மணி

மூர்த்தியின் ஸ்பீக்கர் உற்சாகத்தோடு சங்கீதத்தை 'விசிறிக்' கொண்டிருந்தது!

ஜேசுதாஸ், தானும் கரைந்து -கேட்போரையும் கரைத்துக் கொண்டிருந்தார்!

ஸ்பீக்கர் மூர்த்தி அடுத்த சங்கீதக் கசட்டைக் கையில் வைத்துக் கொண்டே, 'லைற்' இஞ்சினை ஆன் பண்ணினார். ஒரு அசுரனுக்கு சந்தோஷம் வந்து சிரித்தது போல் 'லைற்' இஞ்கின் தனது வேலையைத் தொடங்கியது;

சிறிது சிறிதாக அம்மன் கோவில் நிரம்பத் தொடங்கி விட்டது;

ஆண்கள் பட்டு வேட்டி, சால்வையோடு, பெண்கள் பாவாடை, தாவணிகளோடு- கண்டோரைக் கவர்ந்து கொண்டு வந்தனர்;

வழக்கமாகக் குமர் பெண்களின் மத்தியில் காணப்படும் இரைச்சல் அங்கு இல்லை! அது தம்பாட்டி!

கோயில் நிரம்பி விட்டது.

ஆண்களின் சலசலப்பு; மூர்த்தியின் ஸ்பீக்கர் சத்தத்தையும் மீறி விட்டது.

ஐயர் அபிஷேகம் செய்து கொண்டிருந்தார். மேளக்காரர் 'முழக்கிக்' கொண்டிருந்தனர். அம்மன் மர்மச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு இருந்தாள்.

அந்த காம்ப் அமைதியாக காட்சியளித்தது.

அபிஷேகம் முடிந்து, மேளக் கச்சேரி முடிந்து, கதாப் பிரசங்கம் ஆரம்பமாகியது;

பிரசங்கியார் மகாபாரதத்தை அணு அணுவாய் சித்திரித்துக் கொண்டு இருந்தார்.

மிருதங்கத்தின் நாதமும், மலேடிக்காவின் இசையும் கலந்து கேட்போரை மெய் மறக்கச் செய்தன.

பிரசங்கியார் மகா பாரதத்தில் ஒருசில பகுதிகளே முடித்திருந்தார். இருப்பது இன்றையோடு இரண்டு நாட்கள் தாம்; என்ற வேகத்தில் மகா பாரதத்தைத் துரத்திக் கொண்டு சென்றார்.

கோவில் தலைவர் வந்து ''ஐயா ... கோவில் பெரிய குருக்களை இன்னும்காணேல்ல. கொஞ்சம் கூட நேரம் இழுத்தடியுங்கோ. ஐயர் வருமட்டும் ... '' என்று சொன்னார்.

பிரசங்கியாருக்கு கடவுளைக் கண்ட சந்தோஷம்!

லைட் வெளிச்சத்தில் காம்ப் அமைதியாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது!

திடீரென கூட்டத்தில் சிறிய சலசலப்பு.

தர்மலிங்கத்தார் ஓடி வந்தார். பிரசங்கியார் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.

''ஐயா ... இண்டைக்கு! பதினொன்றரைக்குள்ளை திருவிழா முடித்து எல்லாரையும் அனுப்பிவிடுகிறம். அதுவரைக்கும் சத்தம் போடாம இருக்கச் சொல்லுங்க ... '' சொல்லி விட்டுத்தான் மூச்சுக் காற்றை உள்ளே இழுத்தார்!

நேரம் 9 மணி.

ஆண்களும், பெண்களும் பாதி பதற்றத்துடனும், பாதி அவநம்பிக்கையுடனும் அமர்ந்திருக்கின்றனர்.

அழகிய சந்திர முகங்கள், கார் மேகங்களாய் மாறிக் கொண்டிருந்தன. ஆயினும் அமைதியாய் அமர்ந்திருந்தனர்!

**மோகன முகாரி?**

காம்ப்பும் அமைதியாகவே காட்சியளித்துக் கொண்டிருந்தது.

பிரசங்கியார், மனத்தில் எழுந்த பயத்தை அடக்கிக் கொண்டு தைரியசாலிபோல், மகா பாரதத்தை ஓட்டிக் கொண்டு போனார்.

நேரம் 9–25

மகாபாரதம் யுத்தத்தை நெருங்கிக் கொண்டிருந்தது!

பாண்டவ சேனைகளும் கௌரவ சேனைகளும் சந்திக்கின்றன. அருச்சுனன், கண்ணனின் கீதை கேட்டு- மனம் திருந்தி நாணேற்றுகின்றான்...;

திடீரென ஓர் சத்தம்!

திடுக்கிட்டபடி கூட்டம் எழுந்தது;

அதுவரை அமைதியாகக் காணப்பட்ட...... பரபரப்பாகக் காணப்பட்டது.

எல்லோரும் பீதியுடன் கவனித்தனர்.

வெடிச்சத்தங்கள் தொடர்ந்தது.

ஊர்காவற்றுறை 'ஜெற்றியில்' இருந்தும், காம்பில் இருந்தும் நெருப்புப் பந்தங்கள் போல் வானை இடித்து விடும் போன்ற சத்தங்களுடன் பறந்தன.

''ஐயோ— ஒம்பதரைக்கே தொடங்கீற்றுங்கள்...''

பெண்கள் ''ஐயோ...... அம்மா—... அம்மாளாட்சி—'' என்றெல்லாம் குரல் கொடுத்தபடி சிதறி ஓடினர். குழந்தைகள் நசுங்குண்டன, பின்னர் வேதனையும் பொருட்படுத்தாது எழுந்து ஓடின!

சத்தம் தொடர்ந்தது;

'ஸ்பீக்கர் மூர்த்தி'' ஸ்பீக்கரை நிறுத்தி விட்டு, எஞ்சினையும் நிற்பாட்டிக் கொணர்ந்து விட்டிட்டு கொடுக்குக் கட்டிக்கொண்டு ஓடினார்.

திடீரெனக் கோவில் வெறுமையாய்க் காட்சியளித்தது!

சில துணிவு மிக்க ஆண்கள் ஒளித்து நின்று பார்த்துக் கொண்டு நின்றனர்.

நாலாபக்கங்களிலும் வேட்டுக்கள் பறந்தன. ஊர்காவற்றுறையில் இருந்தும், காரைநகரிலிருந்தும் ''எதிர்த்தாக்குதல்' நடைபெற்றது.

அன்றிரவு முழுவதிலும் சப்தங்கள் கேட்டுக்கொண்டே இருந்தன.

''பதினொன்றரைக்கு எண்டு சொல்லிப்போட்டு ஒம்பதரைக்கே தொடங்கிட்டாங்கள்!......''

கத்திய பெரியவரை அறைந்தான் ஒரு இளந்தலைமுறை.

அவங்களுக்கு என்ன இக்கட்டோ ... அது உங்களுக்குத் தெரியேல்ல....'' உணர்ச்சியுடன் நடுநடுங்கக் கூறினான் இளைஞன்.

அரை அலங்காரத்தோடு அம்மன் சிரித்துக்கொண்டிருந்தாள்! அலங்கரித்துக் கொண்டிருந்த ஐயரும்ஓடிவிட்டார்!

விடிந்தது.

உற்சாகங்கள் வடிந்து, அழகிய பெண்கள் தண்ணீர் அள்ள வருவது இல்லாமல் பூமாதேவி சோகமயமாகக் காட்சியளித்தாள்.

முதல் நாள் குதித்துக் கொண்டு திரிந்த ஆண்களும், பெண்களும் 'அகதிகள்' என்ற புதுப்பெயரோடு பள்ளிக்கூடங்களை நாடிச் சென்றுவிட்டனர்.

கடலின் மறுகரையில் 'நகர்' எரிவது தெரிந்தது! பள்ளிக்கூடங்கள் நிரம்பிக் கொண்டிருந்தன.

'காம்ப்' பின் அருகே நின்ற கடல் ஊர்தி ஊர்மனையை நோக்கி அடிக்கடி பொருமிக் கொண்டு இருந்தது!

அம்மன், அரையலங்காரத்தோடு சிரித்துக் கொண்டிருந்தாள்!

## போர்க்களத்தை நோக்கி!

போர்க்களத்தை நோக்கி, பேய்களைப் போல் சாடும் மனிதர்கள், போகுமுன் புத்த பகவானுடைய அருளை வேண்டுகிறார்கள்.

அருளின் வாரிதியான புத்தன் தன்
ஆலயத்தினில் கூடினார்;
உரிமை உள்ளவர் போலவே, அருள்
ஒருவன் ஆசிஷய வேண்டினார்
பரவி ஏத்தினார், பாடி வாழ்த்தினார்,
பாதம் தொட்டு வணங்கினார்.
தரன தத்தென பேரி தத்திடத்
தரை நடுங்கிடும் வேளையில்
ஆயிரம் பெயர் கொன்றபின், உடல்
ஆயிரம் சதைத் திட்டபின்,
பேயைப் போல, நின்றாடுவார். ஜய
பேரி கொட்டி முழக்குவார்.
தாயையும் சிறு சேயையும் விழச்
சாடி, பாய்ந்திடு குருதியில்
தோயும் கால்தலைப் பிய்த்து வீசுவார்
துள்ளிக் கொக்கரித் தாடுவார்.
பொய்யை மக்கள் மனத்தில் நாட்டவும்,
புழுதி மாயங்கள் செய்யவும்,
பொய்யை மெய்யெனக் காட்டி எங்கணும்
பேரிருட் பனி பெய்யவும்,
உய்ய ஆண்டவன் தந்த உயிரினில்
உள்ள இனிமை முழுதிலும்,
வெய்ய நஞ்சினை ஊற்றவும், பெரு
வீரம் கொண்டவர் ஆதலால்,
அருளின் வாரிதியான புத்தன் தன்
ஆலயத்தினில் கூடினார்.

(மகாகவி தாகூரின் "விஸ்வபாரதி பாடல்கள்' கவிதைத் தொகுப்பிலுள்ள பாடலின் ஒரு பகுதி இது. இதனை தமிழில் மொழி பெயர்த்தவர் பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள்.)

# வாய் திறந்தால் பொய்; பிரச்சாரமே இவன் பிழைப்பு

## அண்டப்புளுகன் கோயபல்ஸ் 3

1897ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 29ந் தேதி ஜெர்மானிய வரலாற்றில் அகற்ற முடியாத களங்கம் படிந்துவிட்ட மறக்க முடியாத ஒரு நாள். ஜெர்மானிய அன்னையின் மானத்தை எடுக்கவும், மதிப்பைக் கெடுக்கவும், அன்னையொருத்திக்கு, கோயபல்ஸ் என்ற மாபாவி மகனாகப் பிறந்த நாள்.

இந்த நாளில், ரேட்என்றவுரில் பிரைட்ரிச் கோயபல்ஸ், பாரு கத்தரினா என்ற கலப்புத் தம்பதிகளுக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தான் கோயபல்ஸ். இவனது தந்தை 'பெட்ரோமாக்ஸ் லைட்' தொழிற்சாலையொன்றில் கூலியாக வேலை செய்தார். தாயோ, டச்சிலிருந்து ஜெர்மானிக்குவந்து குடியேறிய படிப்பறிவில்லாத ஒரு பாமர மாது. ஜெர்மானியத் தந்தைக்கும், டச்சுத் தாய்க்கும் பிறந்த 'இருபிறவி' இவன்.

பிற்காலத்தில் நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை ஒரு கலையாகவே கருதித் தவறாது செய்து வந்த இவன், தன் தாயின் 'பூர்வோத்திரத்தை' முழுக்க முடிமறைக்க முயன்றிருக்கிறான். ஆனாலும், அன்னைக்கு நேர்ந்த அவலத்தை இவன் நாட்குறிப்பில் குறிக்கத் தவறவில்லை.

Social outcast - Slandered... Calumnited – இப்படி வார்த்தைகளைப் போட்டே அவன் அதை வர்ணித்திருக்கிறான். ஊர் மக்கள் அவளைச் 'சுமந்தவளை', ஊரைவிட்டே ஒதுக்கி வைத்திருந்தனர்; ஊராரின் தூற்றலுக்கும் வெறுப்புக்கும், கேலிக்கும், இண்டலுக்கும் அவள் ஆளாக்கப்பட்டு அவமானப்படுத்தப் பட்டாள். காரணம், அவளின் 'பதிவிரதா'த் தனம் அப்படிப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு அன்னைக்குப் பிறந்தவன்தான் கோயபல்ஸ். தாயைப்போல் பிள்ளை; இதில் அவன் தப்பவே இல்லை!

கோயபல்சின் இளமைப் பருவம், சோகமயமானது; சுவையே இல்லாதது. நான்கு வயதிலேயே இவனுக்கு இளம்பிள்ளை வாதம் வந்து அறுவை சிகிச்சை நடந்ததால், ஒரு கால் ஊனமானது; – அவன் நொண்டியானான். பள்ளியில் படிக்கும் போதே இவனை எந்த ஆசிரியருக்கும் பிடிக்காது. ஏனெனில், தனது பெருமையைக்காட்ட இவன் முந்திக் கொண்டு நிற்பானாம். கத்தோலிக்கத் தரும ஸ்தாபனம் ஒன்றில் திருப்பித் தருவதாகக் கூறிக் கடன் வாங்கியே படித்தான். (இவன் இப்படிப் பட்டவனென்று தெரிந்தால், நாங்கள் உதவியே செய்திருக்க மாட்டோமென்று அவர்கள் பின்னால் கூறியிருக்கின்றனர்)

1920-ல் ஹைடில்பர்க் யூனிவர்சிடியில் படித்தான். 1921-ல் அவனது 24 வயதில் டாக்டர் பட்டத்தைப் பெற்றான் அத்தோடு அவன் பள்ளி மாணவர்களால் அவன் பெற்ற சிறப்புப்பட்டம் ''ஏய்ப்பன்'' என்பதாகும். (Ulex)

பள்ளிப் படிப்பு முடிந்ததும், வேலைதேடி இவன் வீதி வீதியாகத் திரிந்தான், ஊர் ஊராக அலைந்தான். அந்நாட்களில் வேதனையான அனுபவங்களையும் பெற்றான். பத்திரிகைகளுக்கு மனுப் போட்டுப் பார்த்தான். நாடகக் கொட்டகைகளுக்கு நடையாக நடந்து தீர்த்தான். ஆனால் எந்த வேலையும் அவனுக்கு எளிதில் கிடைக்கவில்லை நீங்க முடியாத வறுமையினாலும், தாங்கமுடியாத கொடுமையினாலும் இவன் ஒருசமயம் தற்கொலையே செய்யத் துணிந்த போது, இந்தச்சமயம் அவனுக்குக் காதலியாக இருந்த எல்ஸ் என்பவள் தடுத்துவிட்டாள் வருங்கால சமுதாயத்திற்குத் தானொரு மகத்தான தீங்கு செய்கிறோம் என்பதை அறியாமலேயே அந்தப் பேதைப் பெண் அதைச் செய்துவிட்டாள். அன்று அந்தக் கோயபல்சின் தற்கொலையைமட்டும் அவள் தடுக்காது இருந்திருப்பாளேயானால், இன்று அவனைக் குருவாகக் கொண்டு, அரசியலிலே அவனை அச்சடித்து வைத்தது போல் பின்பற்றிப் பிழைப்பு நடத்தும் பல கோயபல்சுகள் உயிரோடு உலவமாட்டார்களல்லவா?

### ○'தி' எழுதுவது

ஒருநாள் – இவன் பட்டாளத்தில் சேர்ந்து விடுவதென்ற முடிவில், ஆளெடுக்கும் இடத்திற்குச் சென்றான் இவனது ஐந்தடி உயரத்தையும், ஒடிந்து விழும் உடலையும், உள்வடங்கி வளைந்த தோளையும், ஊனமாய் நின்ற காலையுங்கண்ட அதிகாரி, விழுந்து விழுந்து சிரித்து விட்டு இவனை வெளியே அனுப்பி விட்டார். அந்தச் சம்பவம் இவனுக்கு அளவு கடந்த சங்கடத்தைக் கொடுத்ததாம்.

பிழைப்புக்குதவாத படிப்பாலும், உழைப்புக்குதவாத உடலாலும், இவன் 'பெரும் பிணி'யைத் தீர்க்க இயலாததாலுமே – பிழைப்புக்கு வழி தேட வேண்டுமென்று எண்ணிய இவன் – தானொரு பிரபல எழுத்தாளனாக – பேனா வீரனாக மாற வேண்டுமென்ற பேராவல் கொண்டான். இவனது பள்ளி நாட்களில் குண்டல்ப் (Gundolf) என்ற இலக்கிய வரலாற்றாசிரியனின் தொடர்பு இவனுக்குச் சிறிது கிடைத்தது. காதல் கவிதைகளிலும், நாடகங்களிலும் இவனுக்கிருந்த காதல், அளவிடற்கரியது. ''காதல் நாடகங்களின் வரலாறு'' என்ற இவனின் முதற் புத்தகத்தின் மூலந்தான் இவனுக்கு ''டாக்டர்'' என்ற பட்டமே கிடைத்தது.

1929-ம் ஆண்டு இவன் எழுதிய முதல் நாவல் ''மைக்கேல்'' என்பதாகும். இதில் இவனின் நிழலும், நினைப்பும், முழுக்க முழுக்கக் கலந்திருக்கிறது. இதில் வருகின்ற கதாநாயகி இவன் வாழ்க்கையில் வந்து போன காதல் நாயகியே!

அந்த நேரத்தில், இந்த நாவலை வெளியிட எந்தப் புத்தக வெளியீட்டாளனும் ஒத்துக் கொள்ளவில்லை. பல ஆண்டுகள் கழித்து, இவனது அரசியற் குருநாதன் அடால்ப் ஹிட்லரின் சொந்தப் பதிப்பிலேயே இந்தப் புத்தகம் வெளியானது. கோயபல்ஸ் என்றால் யாரென்று எவனும் அறியாத காலத்திலேயே இவனின் எந்தப் புத்தகமும் வெளிவந்து. இவன் புகழ் நாட்டு மக்களிடம் பரவுவதற்கு வெகு நாட்களுக்கு முன்னரே, இவன் தனக்குத் தானே பட்டப் பெயர்களைச் சூட்டிப் பரவசப்

—6 ம் பக்கம் பார்க்க

### முள்ளுக்கும் முள்வேலி

தொண்டையிலே
கத்தி வைக்கும்
ஊர்த்
தொண்டனும்

பொதுச் சேவை
பெயரால்
சுய தேவை
பூர்த்தி செய்யும்
சேவகனும்

வெள்ளை
வேட்டி கட்டி
உத்தமனாய்
பவனி வந்து
புனிதனாய்
நடமாடி
ஊரை
தின்ன வரும் போது

முள்ளுக்கும்
முள் வேலி
நெருப்பிற்கும்
'செக்குரிட்டி'
'காட்' வேண்டும்!

★ ஈழநிதி

# கிழக்கிலங்கைக் களத்தில் புனைகதை தந்த முதல்வர் வ. அ. இராசரத்தினம்

''மூதூர்ப் பிராந்தியத்தின் சமூக பொருளாதார அரசியல் சரித்திரத்தை இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வரும் சரித்திர மாணவன் அறியவேண்டுமாயின் அவன் என் கதைகளைப் படித்தேயாக வேண்டும்'' என மிகுந்த தன்னம்பிக்கையுடன் கூறுகிறார் கிழக்கிலங்கையின் முதுபெரும் எழுத்தாளர் வ. அ. இராசரத்தினம். இவரது எழுத்துக்களிலே மகாவலிகங்கைக் கரையையும் அதன் அழகையும் வளத்தையும் பார்ப்பதுடன், கிழக்குக் கடற்கரை எழிலையும் காணலாம். அழகான வர்ணனைகளை இணைத்து தெளிவான நடையிலே கட்டுக்கோப்பான பல நல்ல கதைகளை எழுதியுள்ளார் இவர். யதார்த்தமும் மனிதாபிமானமும் இவரது கதைகளில் பளிச்சிடும்.

1925 ஆம் ஆண்டு மூதூரில் பிறந்த வ. அ. இராசரத்தினம் தமது ஆரம்பக் கல்வியை மூதூர் புனித அந்தோனியார் வித்தியாலயத்திலே பெற்றார். பின்னர் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் 1946–47 ஆம் ஆண்டுகளில் பயிற்சிபெற்று ஆசிரியரானார். அக்காலத்திலேயே மட்டக்களப்புக் கவிஞர் வி. இ. இராஜதுரை (இராஜபாரதி)யின் தொடர்பினால் முதலில் கவிதைகளையே எழுதினார். இவரது முதற்கவிதை வசந்தம் சஞ்சிகையில் பிரசுரமாகியது. மட்டக்களப்பில் எஸ். டி. சிவநாயகம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளியாகி வந்த 'உதயம்' பத்திரிகைக்குச் சிறுகதை எழுதினார். அக்கதை வெளிவர முன்பே உதயம் அஸ்தமனமாகிவிட்டதால் அக்கதை பின்னர் தினகரனில் வெளியாகியது. இதுவே இவரது முதற் சிறுகதையாகும். தொடர்ந்தும் கவிதைகளையே எழுதினார். 'ஈழகேசரி' பத்திரிகைக்குக் கவிதைகளும் கதைகளும் எழுதினார் எனினும் புனைகதை ஆசிரியராகவே இவர் பிரகாசிக்க முடிந்தது: ஈழகேசரி ஆசிரியர்

## (முல்லைமணி)

இராஜ. அரியரத்தினம் அவர்களே கதையெழுதுமாறு ஊக்குவித்தவர் என்று நன்றியுணர்வுடன் கூறுகின்றார் வ. அ. இ. இவரது ஆக்கங்களுக்கு சுதந்திரன் பத்திரிகையும் இடம் அளித்தது. 1954இல் கொழுகொம்பு என்னும் நாவலைத் தொடராக ஈழகேசரியில் எழுதினார். பின்னர் அந்நாவல் 1956இல் நூல் வடிவம் பெற்றது. ஈழநாட்டில் 'துறைக்காரன்' என்னும் நாவலை

## மதியும் பிறையும்

1959இல் தொடராக எழுதினார். கிரௌஞ்சப் பறவைகள் 1975இல் வீரகேசரி வெளியீடாக வந்த சரித்திர நாவலாகும்.

### சிறுகதை

''ஈழத்துச் சிறுகதைத் தொகுதியில் வெளிவந்த இவரது 'தோணி' என்னும் சிறுகதை ஈழத்திற்கே பெருமை தரும் படைப்பாகும். தமிழகத்தின் 'ரீடேர்ஸ் டைஜஸ்ட்' டான மஞ்சரி அதை மறுபிரசுரஞ் செய்து கௌரவித்தது. 'தோணி'க் கதையும் சேர்த்து அவரது சிறுகதைத் தொகுதி வெளிவந்தது அதற்கு அவர் ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டலத்தின் பரிசிலைப் பெற்றுள்ளார். அத்தொகுதியிலே இடம்பெற்றுள்ள 'பாலசு பிறந்தான்' 'பிரிவுபசாரம்' ஆகிய கதைகள் நல்லவை. அவை கதைக்கு ஏற்ற கருவை அன்றாட வாழ்க்கையிலே தேர்ந்தெடுக்கும் திறமையைப் புலப்படுத்துகின்றன. ஈழகேசரி வளர்ப்புப் பண்ணையில் வளர்ந்த இவர் அப்பத்திரிகையில் எழுதும் பொழுதுதான் கவர்ச்சியுடன் எழுதினார்'' என ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் வ. அ. இ வைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் கனக. செந்திநாதன் அவர்கள்.

### நாவல்

''வ.அ. இராசரத்தினம் எழுதிய கொழுகொம்பு நவல காதல் தியாகம் முதலிய தனி மனித உணர்வுகளோடு அமைந்த குடும்பக் கதையாக இருந்த போதும் கதை நிகழும் களம், கதாசிரியர் வழங்கும் செய்தி ஆகியவற்றின் அடிப்படையில் அதனையும் சமகால சமூக உணர்வுடைய நாவலாகவே கொள்ள வேண்டும் கிழக்கிலங்கையைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் என்ற வகையில் குறிப்பிடத்தக்க சிறப்பு இந்நாவலுக்கு உண்டு.... – சமூகத்தில் பெண்கள் ஆண்களை நம்பி ஏமாற்றமடைந்து துன்புறாது தமது காலிலே தனித்து நின்று இயங்க வல்ல சமுதாய நிலையை உருவாக்க வேண்டும். என்றும் அதுவரை ஆண்களே பெண்களுக்குக் கொழுகொம்பு ஆக அமைய வேண்டும் என்றும் பிலோமினா மூலம் ஆசிரியர் போதிக்கின்றார். இந்நாவலில் மூதூர்ப் பிரதேச இயற்கைச் சூழல், மட்டக்களப்பு என்பன புலப்படுத்தப் படுகின்றன.'' என ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

### குறுநாவல்கள்

விவேகியில் இவரது பாலை, தேய்பிறை ஆகிய குறுநாவல்களும், மித்திரன் வாரமலரில் சாந்தனூர் புரவி என்னும் குறுநவலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன 'ஒருகாவியம்நிறைவுபெறுகின்றது' என்னும் குறுநாவல் வீரகேசரியில் தொடராக வெளிவந்து பின்னர் 1975இல் திருக்கோணமலை முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழுவினால் நூல் வடிவம் தரப்பட்டது. இக்குறுநாவல் வ. அ. இ. அவர்களின் சொந்தச் சரித்திரம். இவரது பாரியார் லில்லி அவர்களின் மறைவையொட்டி வெளியிடப்பட்டது. இந்தக் குறுநாவலிலிருந்து சில துளிகள்;

''நான் எழுத்தாளனாக இருப்பதில் உள்ளூரப் பெருமைப் பட்டவள் நீ! உன் ஒழிச்சலில்லா வேலைகளிடையே என் எழுத்துக்களை வரிக்குவரி படித்துவிட்டு நான் எதிர் பார்த்திராத நேரத்தில் நறுக்கத் தெறித்தாற் போல் விமர்சிப்பவள் நீ ஏன், எழுத்தாளன் ஆக்குவித்தவளே நீதான்.

எனக்குத்தேவையானதெல்லாம் உமார்க்கய்யாம் பாடியது போல்:

ஒரு கவிதை நூல்
மதுக் கிண்ணம்
நீ

—7ம் பக்கம் பார்க்க

## ★ ஜூலை 15க்கு மேல் அழிவுகள் பலவுண்டு
## ★ செவ்வாய் நீசம் தமிழருக்கு விமோசனம்

# இலங்கை மீது இந்தியா கூடிய கவனம் செலுத்தும்

1985ம் ஆண்டு 13ம் திகதி முன்னிரவு குரோதன வருடம் பிறக்கும் போது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லீம் இனக்கலவரமும், இந்திய மாநிலமான குஜராத்தில் ஹரிசனங்களுக்கும் உயர் சாதி இந்துக்களுக்குமிடையில் மோதலும், பாகிஸ்தான் பழைய தலைநகரமாகிய கராச்சியில் குழப்பமும், தென்ஆபிரிக்காவில் வெள்ளையர்களுக்கும் கறுப்பின மக்களுக்கிடையில் குழப்பமும், லெபனனில் இரு இன முஸ்லீம் இயக்கங்களுக்கிடையில் மோதலும், முஸ்லீம் இயக்கமொன்று இஸ்ரேல் படையை தாக்கியதன் மூலம் 50 இஸ்ரேலிய இராணுவ வீரர் மரணம் ஏற்பட்டதை பத்திரிகைகள் மூலம் படித்திருப்பீர்கள்.

மேல்குறிப்பிட்ட குழப்பங்களை விட புது வருட தினத்திற்கு முன்பின்னாக ஒரு கிழமைக்குள் சூடான் ராணுவப் புரட்சி, சின பூமியதிர்ச்சி, நைஜீரிய நாட்டில் இரு இன முஸ்லீம்களுக்கிடையில் கலகங்கள், கிழக்கு வங்காளத்தில் புயல், யாழ்ப்பாணத்தில் பொலிஸ் தாக்குதல் போன்ற விபத்தினால் உயிரிழந்தவர்கள் பல பல. இன்று நடப்பதே இதன் அதிர்ச்சியே.

கார் செறியும் விந்த முதற்
கௌதமை மட்டாகக்
கனகனுக்காங் கிருஷ்ணை
வரைக் காப்பிய நாடாமே.
சீருலவு கிருஷ்ணை முதலங்
கை வரையந்தச்
செவ்வாயின் தேசமென்றே
செப்புவர் நல்லோரே.

மேற் சொன்ன செய்யுளின்படி கேகய நாட்டின் நடுவிலிருந்து (டெல்கிக்கு வடக்கே) பனி படர்ந்த பிரதேசமட்டும் பாம்புசனி நாடு எனவும், தென்னிந்தியாலிருக்கும் கிருஷ்ணு நதிக்கு தெற்கே இலங்கை வரை செவ்வாயின் பிரதேசமெனவும் குறிப்பிடுகிறது.

## ★ பிறைசூடி

இந்திய உபகண்டத்தில் தற்பொழுது கிருஷ்ணு நதிக்கு தெற்கே இலங்கைவரை ஆந்திரா கர்நாடக தமிழகம் கேரளம் பொண்டிச்சேரி என ஐந்து இந்திய மாநில அரசுகளும் இலங்கையும் சேர்ந்து ஆறு அரசுகள் இருக்கின்றன. இந்தியா சுதந்திரமடைவதற்கு முன் சென்னை, ஹைதராபாத் மைசூர், திருவாஸ்கூர் நொச்சி கோவைமாகி பொண்டிச்சேரி

தற்பொழுது செவ்வாயின் ஆதிக்கத்திலுள்ள ஆறு இராச்சியங்களிலும் அ. ஆ. இ. ஈ. என்ற உயிர் எழுத்துக்களில் தான் பாஷை தொடங்குகிறது. சிங்களத்தில் அயன, ஆயன, இயன, ஈயன, என்ற உயிர் எழுத்தில்தான் பாஷை தொடங்குகிறது. ஆதிகாலம் வரை தென்னிந்தியாவையும் இலங்கையையும் சேர்த்து மாறி மாறி ஒன்பது இராட்சியங்கள் தான் இருந்தன. அவை ஒரு குடையின் கீழும் சில சமயம் 2, 3, அல்லது 9 குடையின் கீழும் ஆட்சி நடைபெற்றுள்ளன. ஒரு குடையா அல்லது ஒன்பது குடையா என்பது செவ்வாயின் பலத்தைப் பொறுத்துத்தான் ஆட்சிகள் நடைபெற்றுள்ளன. இனி மேற்கண்ட கேள்விகளுக்கு சரியான காரணத்தை ஆராய்வோம்.

கிழக்கு மாகாண குழப்பம் ஏற்பட்டதைப்பற்றி ஆராய்ந்த பொழுது. இலங்கையின் லக்கினம் கும்பம் கும்ப லக்கினத்திற்கு 3-ஆம் வீடு மேடம், மூன்றும் வீட்டைச் சகோதர ஸ்தானமென அழைப்பர். இந்த மூன்றும் வீடாகிய மேடம் தமிழருக்கு லக்கினமாகும். தமிழரின் லக்கினமாகிய மேடத்தில் செவ்வாயும் ராகுவும் வருடதினத்தில் நின்றது கவனிக்கத் தக்கது- தமிழரின் கிரகம் செவ்வாய் தமிழ் பேசும் முஸ்லிங்களுக்கும் செவ்வாய்தான் ஆதிக்கம். இலங்கையின் லக்கினமாகிய கும்பத்திற்கு சகோதர ஸ்தானமாகிய மேடத்தில் செவ்வாய் ராகு கூடிநிற்க சனி கேது கூடி சகோதர ஸ்தானமாகிய மேடத்தைப் பார்க்க, ஒரு பாஷை பேசும் தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையில் குழப்பம் ஏற்பட்டது.

ராசி வட்டத்தில் மேடம் கிழக்குப்புறம் அதனால் செவ்வாயின் பிரதேசத்தில் கிழக்குப் புறத்தில் குழப்பம் ஏற்பட்டது.

ராசி வட்டத்தில் துலாம் மேற்குப்புறம் அதனால் சனியின் பிரதேசமாகிய மேற்குப்

—7-ம் பக்கம் பார்க்க

## இது சாஸ்திர ரீதியான ஓர் ஆய்வுக்கண்ணோட்டம்

மேற்குறிக்கப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு காரணம் செவ்வாய் ராகு கூட்டும் சனி. கேது, கூட்டும் பூமியை நேர் கூட்டில் நின்று தாக்கியமையே. இத்தருணத்தில் வக்கிரக கதி அடைந்த சனி வெகுதூரத்தில் நின்று [அதாவது 21 கோடி கட்டை] தாக்கியமையால் பூமியில் சேதங்கள் குறைவாக இருந்தது. ஆனால் 1985 யூலை 15க்கு மேல் செப்டம்பர் மாதம் வரை நீச செவ்வாய் கேது சனியைத் தாக்குவதினாலும் உச்சச் சனி செவ்வாயை தாக்குவதினாலும் பூமியில் பல அழிவுகள் ஏற்படலாம்.

குரோதன வருடதினத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண சம்பவங்கள் எக்கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. குஜராத், கராச்சி சம்பவங்கள் எக்கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

தமிழருக்கு ஓர் இராச்சியம் கிடைக்குமா?

அந்நிய நாடுகளின் தலையீடு இலங்கையில் ஏற்படுமா?

மேற்கண்ட கேள்விகளுக்கு நான் பதில் வழங்குமுன் கீழ் கண்ட செய்யுளை வாசகர்கள் கவனமாக வாசித்தறிய வேண்டும். சாதாரண பொது மக்கள் வாசித்தறிய முடியாவிட்டால் இதன் கருத்தை கீழ் தந்துள்ளேன். இச் செய்யுள் இந்திய உபகண்டத்தின் பிரதேச கிரக ஆதிக்கத்தை எடுத்தியம்புகிறது.

பாரெல்லாஞ் சசி கதிரோ
னிடுவேசர்க்கு மாகும்.
பனி வரை கேகயத்தினடு
பாம்பு சனி நாடாம்;
ஏருலவுங் கேகயந் தொட்
டெழில் விந்த மட்டும்
இந்து சுதன் பூமி யென்றே
யியம்புவர் நல்லோர்கள்.

இலங்கை என ஒன்பது இராச்யங்கள் இருந்திருக்கின்றன. இந்தியா சுதந்திரமடைந்ததன் பின் சமஸ்தானங்களை அழித்து இராட்சியங்களை புனரமைப்புச் செய்த பொழுது தென்னிந்தியாவில் தற்பொழுதுள்ள ஐந்து இராட்சியங்களும் தோன்றினவோ அன்று தொட்டே இலங்கையில் இனப்பிரச்சினை தோன்றி பிரிவினை கோஷம் கிளம்பிற்று.

செவ்வாயின் ஆதிக்க எண் ஒன்பது என்பது கவனிக்கப்பட வேண்டும். அது மாத்திரமல்ல

## மறக்க முடியாத கவிஞன் வண்ணைத் தியாகன்

கவிஞர் மு. தியாகராசா "வண்ணைத் தியாகன்" மறைந்தும் ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்து விட்டன. அவருடைய மறைவையும் ஈழத்தில்



பிரபலம் பெற்று விளங்கிய துள்ளிசை (பொப்) ப் பாடல்களின் துயில்வதையும் ஒப்பிட்டு நோக்கக் கூடியதாக உள்ளது.

ஏனெனில் புகழ் பெற்ற "ஓ ஷீலா..." 'மிஸ்சா... மிஸிஸ்சா...' "அடுத்த வீட்டுக் கல்யாணிக்குக் கல்யாணம்..." போன்ற துள்ளிசைப் பாடல்களை ஆரம்பத்தில் இயற்றி துள்ளிசையின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழ்ந்து பங்களித்தவர் அவர் என்பதால்—

நூற்றுக் கணக்கான பாடல்களை இயற்றி இருந்த போதும் ஒருசில பாடல்களே இவரது பெயருடன் விளங்குகின்ற அளவுக்கு தன்னுடைய பெயரைப் பிரபல்யப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கம் இல்லாமல் ஆத்ம திருப்திக்காகப் பாடல்களைப் புனைந்து வந்திருப்பமை கண்கூடு.

"அடுத்த வீட்டுக் கல்யாணிக்கு கல்யாணம்..." என்ற பாடல் இவரால் இயற்றப்பட்டிருந்தும் சில மாற்றங்களுடன் வேறொருவர் சொந்தம் கொண்டாடுவதைக் கவிஞரே

—7-ம் பக்கம் பார்க்க

## ● சொற்பாதம்

# அவரை இங்கே அழைத்து வாருங்கள்

★ யோ. பெனடிக்ற் பாலன்

மேலே உள்ளவர்
எல்லாம் வல்லவர்
எம்மைப் படைத்துக்
கீழே விட்டு விட்டு
அவர்
மேலேயே இருக்கிறார்
நாம் இங்கே
சாவோலங்களுக்கும்
அபயக் குரல்களுக்கும்
குருதி சிந்தல்களுக்கும்
கண்ணீர் வடிப்புகளுக்கும்
மத்தியிலே
வான வெளியை
அண்ணாந்து நோக்கி
சமாதானத்துக்காக
அனுதினமும்
செபித்துக் கொண்டிருக்கிறோம்
இரவில்
படுக்கப் பாய் விரிக்கையிலும்
இடையில் தூக்கம் கலைகையிலும்
காலையில்
கண் விழித்துப் பார்க்கையிலும்
ஆவலோடு எம் ஆத்மாக்கள்
நிம்மதியைத் தான் தேடுகின்றன.
ஒரு மனிதனும் இன்னொரு மனிதனும்
ஒரு குடியும் இன்னொரு குடியும்
ஒரு குழுவும் இன்னொரு குழுவும்
ஒரு இனமும் இன்னொரு இனமும்
ஒரு வர்க்கமும் இன்னொரு வர்க்கமும்
உள்ளதைப் பகிர்வதில்
நாய் கடி பூனைகடி
உற்பத்திக் காணிகளை
உடல் உழைப்புகளை
தனியுடைமை யாக்குவதில் வேர் கொண்ட
பிரச்சினைகளின் கோரிக்கைகள்
உயிர்பலி உடற்பலி
எந்த நாளும்
இரத்தக் களரி
அநீதியே ஆயுதத்தேரில்
நரபலி தேடி
ஊர்வலம் வருகிறது
ஒரு நாளாயினும்
மனிதக்
குருதியில் முகஞ்சிவக்காது
சூரியன்
மறைந்த தில்லை
எங்கள் ஆத்மாக்களோ
நீதியைக் கோரி
மூழந் தாளில் நின்று
விண்ணகத்தை ஏறிட்டு
பிரலாபித்து அழுகின்றன
கூக்குரல் இடுகின்றன.
எங்கள் நேர்த்திகள்
எங்கள் வேண்டுதல்கள்
எங்கள் உருக்கமான செபங்கள்
எங்கள் சாஷ்டாங்க வணக்கங்கள்
மேலே யுள்ளவர்
காதை எட்டுவதற்கு
நீண்ட தூரம் பயணஞ் செய்கின்றனவோ?
அமைதி வடிவான
பகவான் புத்தரே!
இரட்சகர் இயேசுவே
இறைநாதர் நபிநாதரே!
நீங்கள்
இங்கே வந்தீர்கள்
மனிதர்
சமாதானமாய் வாழ
வழி பல சொன்னீர்கள்
நீங்கள் மேலே போய்
இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு
மேலேயும் ஆயிற்று
உங்கள் போதனைகளை
மனிதர்
ஏற்காமல் விடவில்லை
உங்களுக்குப்
பிரமாண்டமாய்க் கோயில் கட்டி
உங்கள் பாதங்களை
வணங்கிய பின்னரே
அதர்மங்கள் அத்தனையும்
ஆயுதம் ஏந்துகின்றன
உங்கள் கருணை நெஞ்சங்கள்
கல்லாகிப் போயினவோ
மீண்டுமொரு முறை
இங்குவர
உங்கள் இதயங்கள்
ஏன் துடிக்கவில்லை?
தாங்கள் செய்த பாவங்களுக்காக
உடலும் உள்ளமும் வதைபடும்
மக்களுக்காக
இருகை கூப்பி
உங்கள் பாதார விந்தங்களில்
மண்டியிட்டு
தாழ்மையாய்க் கேட்கிறோம்
நீங்கள் மூவரும்
இன்னுமொருமுறை
இங்கே வாருங்கள்
இம்முறை வருகையில்
மேலே உள்ளவர்
எல்லாம் வல்லவர்
அவரை இங்கே
அழைத்து வாருங்கள்
அவரின்றி ஓரணுவும்
இங்கே அசையாதாம்
ஆகையினால்
அவரை இங்கே
அழைத்து வாருங்கள்
நிலைமையை நேரிலே
அவருக்குக் காட்டுங்கள்
எங்களுக்காகப்
பரிந்து பேசுங்கள்
அடக்குமுறைக் கிரையானோர்
அடைக்கலம் கேட்போர்
அபயக்குரல் எழுப்புவோர்
உரிமைகள் இழந்து
அடிமைகளானோர்
உடைமைகள் இழந்து
அகதிகளானோர்
தலைசாய்க்க இடமின்றி
அந்தரித்து நிற்போர்
அனைவரின் துன்பங்களையும்
ஆதியோடு கேளுங்கள்
நீதி எங்கிருக்கோ
அங்கே
அவர் தீர்ப்பு ஆகட்டும்
அவரவர்க்குரியதை
அவரவர்க்குக் கொடுங்கள்
கூடவும் வேண்டாம்
குறையவும் வேண்டாம்
உணவாயினும் உடையாயினும்
வீடாயினும் நிலமாயினும்
ஒருவருக்குரியது
மற்றவருக்கு வேண்டாம்
அவரவரிடத்தில்
அவரவரை
வாழ விடுங்கள்
நீதியும் சமாதானமும்
நிம்மதியும் நிலைக்கட்டும்
பிறகு இங்கே
உங்களுக்கு
வேலையொன்று மிருக்காது
அவரையும்கூட்டிக்கொண்டு
நீங்கள்
மேலேயே போய் விடலாம்
ஆகையினால்
மேலே யுள்ளவர்
எல்லாம் வல்லவர்
அவரை இங்கே
அழைத்து வாருங்கள்!

### வாய் திறந்தால்....

--5-ம் பக்கத் தொடர்

பட்டுக்கொண்டது விந்தையானது; மிக வேடிக்கையானது. "கலைமகனின் இளைய மகன்" The young son of the Muses) என்றும். "அரிய கலைஞன்" (Supreme Artist) என்றும் தனக்குத்தானே பெயர் வைத்துக் கொண்ட இவன், பிறரும் தன்னை அப்படியே மதிக்க வேண்டும், துதிக்க வேண்டும், அழைக்க வேண்டுமெனவும் விரும்பினான். இந்தச் சமயத்தில் ஜெர்மானிய பாராளுமன்ற உறுப்பினரான Wieger shaus என்பவர் நடத்தி வந்த "மக்கள் விடுதலை" (Peoples Freedom) என்ற பத்திரிகையிலும் இவன் கொஞ்ச நாட்கள் வேலை செய்தான். (தொடரும்)

ஈழமுரசு



## கிழக்கிலங்கைக் ..

—5ம் பக்கத் தொடர்

இந்த மூன்றையும் எனக்குக் குறைவறத் தந்து கொண்டு சீட்டுக்கட்டிப் பணம் சேர்த்து வீட்டைக்கட்டி எழுப்புகிறாய். என் மாதச் சம்பளத்தை உன்னிடம் தந்துவிடுவதையும் (கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர் குற்றால) தி'திரிகூடம்' என்று பெயரிட்டதையும் தவிர வேறு ஏதும் எனக்குத் தெரியுமா சரியாக ஒன்பது மாதங்களுக்கு முன்னே நாம் திரிகூடத்தில் குடிபுகுகின்றோம்.

கையிலே நவதானியங்கள் நகைப்பெட்டி இன்னும் ஏதேதோ பொருட்களை ஒரு தட்டிற் சுமந்து கொண்டு சித்திரப் பதுமையாய் நீ நடக்கிறாய்:

விலையேறப்பெற்ற பொருட்களையும் எடுத்துக் கொண்டு உன்னோடு என்னையும் போகும்படி பெரியவர்கள் பணிக்கிறார்கள் நான் விலையேறப் பெற்ற பொருட்கள் இருக்கும் என் றாக்கையிலிருந்து அவசர அவசரமாக இரண்டு புத்தகங்களை சில பதிகாரமும், மு. தளையசிங்கத்தின் "புதுயுகம் பிறக்கிறது" என்னும் சிறுகதைத்தொகுதியும்தான் என் கையில் சிக்க, எடுத்துக் கொண்டு உன்னோடு இணைந்து நடக்கிறேன்.

நான் கொண்டுவரும் 'விலையேறப்பெற்ற' பொருட்களைக் கண்டு உறவினர்களுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

ஆனால் நீ மட்டும் அமைதியாகச் சிரிக்கிறாய் சிரித்துக் கொண்டே கேட்கிறாய்:

"உங்கள் பேனையைக் கொண்டு வருகின்றீர்களா?... அதையும் புத்தகங்களோடு சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள்.

"வ.அ.இராசரத்தினம் என்ற எழுத்தாளன் செத்துப் போனான் என்று சொன்னேன் அல்லவா. அவன் சாகவே மாட்டான் ஏனென்றால் ஒரு காவியநாயகியாக இடம் பெற்ற லில்லியின் கதையை அவன் எழுத வேண்டும்"

என்று அருகில் நின்ற எஸ். பொ. விடம் உணர்ச்சியோடு சொல்கிறேன்.

### பதிப்பு முயற்சிகள்

மாவலி கங்கைக் கரையிலே 'திருக்கரைசை' எனும் புகழ் பெற்ற சிவஸ்தலம் ஒன்று உண்டு. அகஸ்தியரால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கம் இங்கு உண்டு. இத்தலத்தின் பேரில் 'திருக்கரைசைப் புராணம்' என்னும் நூல் பாடப்பட்டது. இந்நூற்பிரதிகள் கிடைப்பது அருமையாகிவிட்டதால் கிறிஸ்தவ சமயத்தவரான வ. அ. இ. அவர்களே இதனை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

கட்டைபறிச்சான் இந்து இளைஞர் சங்க வெளியீடாக மலர்ந்து இதன் அறிமுக விழா 1975 ஆடி அமாவாசைத் தினத்திலே கரைசையம் பதியிலே இடம் பெற்றது. இந்த வெளியீட்டு விழாவுக்கு என்னையும் அழைத்திருந்தார் இந்து இளைஞர் மன்றச் செயலாளர். கவிஞர் க. கனகலிங்கம் அவர்கள் காட்டின் மத்தியிலே அமைந்த திருக்கரைசைப் பதிக்கு கூடார வண்டியில் சென்ற சுவையான அநுபவம் இன்றும் நிழலாடுகிறது. இந்த அநுபவத்தையும் ஒரு எழுத்தாளன் நூல் வெளியிடுவதிலுள்ள சிரமத்தையும் கருவாகக் கொண்டு 'அமரகாவியம்' என்னும் சிறுகதையை எழுதினேன், வெளியீட்டு விழாவிற்கென சென்ற என்னை விழுந்து விழுந்து உபசரித்து திருமதி லில்லி இராசரத்தினம் அவர்கள் சில மாதங்களின் பின்னர் காவியத்தின் கதாநாயகியாகி விட்டதை அறிந்து இரத்தக் கண்ணீர் வடித்தோருள் யானும் ஒருவன்.

உத்தியோகத்திலிருந்து

## மறக்க முடியாத....

—6-ம் பக்கத் தொடர்

ஒரு தடவை என்னிடம் கூறி மலம் நொந்து கொண்டதும் உண்டு

அதனைத்தான் அவரது மறைவின் பின்னால் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் பேசும்போது பிரபல நடிகரும், வண்ணைக் கலைவாணர் நாடகமன்றத்தின் இயக்குநர்களில் ஒருவருமான லோகநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

"மறைந்த கவிஞர் வண்ணைத் தியாகனது எத்தனையோ மெல்லிசைப் பாடல்களும் துள்ளிசைப் பாடல்களும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் ஒலிபரப்பப் படுவதை அவரே அறிய மாட்டார் "

கவிஞரை நன்கு அறிந்திருந்த ஒருவரது கருத்தாக வெளி வந்த வார்த்தைகள் அவரது அடக்கமான கலை இலக்கியப் பணிகளை ஏனையோர் விரித்துப் பார்ப்பதற்கு வழி விட்டிருப்பதாகக் கருதலாம்.

1933 ம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆந் திகதி யாழ்-வண்ணார்பண்ணையில் பிறந்த கவிஞர், பாடசாலைக் கல்வியை ஐந்தாம் வகுப்புடன் நிறுத்திக் கொண்டு தகப்பனார் செய்து வந்த சிகை அலங்காரத் தொழிலில் ஈடுபட்டு வந்த போதும் கலை இலக்கியத் துறைக்கு தன்னாலான சேவைகளைச் செய்வதில் எப்பொழுதும் ஒறுத்தவர் இல்லை.

துள்ளிசைப் பாடல்களின் துடிப்பு நின்றது போல் துள்ளிசைக் கவிஞனர் "வண்ணைத்தியாகன்" கடந்த 1983 ஆம் வருடம் ஆனி மாதம் 17 ஆந் திகதி தன்னுயிர் துடிப்பை இழந்து அமரராகி விட்டார்.

கலை உலகிற்கும். இலக்கியத் துறைக்கும் அவர் ஆற்றிய பணியைக் குறைத்து மதிப்பிட முடியாது. எதிர் காலத்தில் அவரது நினைவை வளர்த்துச் செல்ல வேண்டியது கலைஞர்களதும், கவிஞர்களதும் கடமையாகும்:

★ தேவி. பரமலிங்கம்

---

ஓய்வு பெற்ற எழுத்தாளர் வ அ. இ. 'தங்கம்' வெளியீடு என்னும் பிரசுர நிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வருகின்றார். கவிஞர் நீலாவணனின் 'வேளாண்மை' என்னும் காவியத்தைப் பதிப்பித்து வெளியிட்டார். இன்னொரு கிழக்கிலங்கைக் கவிஞர் செ. குணரத்தினத்தின் கவிதைத் தொகுதி 'தங்கம்' வெளியீடாக வெளிவரவிருக்கின்றது. 05-06-1985 இல் மணிவிழாக் கண்ட வ. அ. இ. இவ்வாண்டிலேயே 'இராசா வந்திருக்கிறார்" என்னும் சிறுகைத் தொகுதியையும், 'சாந்தனூர் புரவி' குறுநாவல் தொகுதியையும், 'தந்தையின் காதலி, வானொலிநாடகத்தொகுதியையும் பிரசுரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

### மொழிபெயர்ப்புக்கள்

அன்ரன் செக்கோவ், மாப்பாசான், தாகூர், ஒஸ்கார் வைல்ட், ஜேம்ஸ் ஜேய்ஸ் ஆகியோரின் சிறுகதைகளை மொழி பெயர்த்து வெளியிட்ட இவர் இக்பாலின் கவிதைகளை மொழி பெயர்த்து 'பூவரசம்பூ' நூலாக வெளியிட்டுள்ளார்.

கவிதை, சிறுகதை, குறுநாவல், நாவல் குறுங்கதை, நாடகம் ஆகிய பல்வேறு துறைகளிலும் தன் கைவண்ணத்தைக் காட்டிய வ. அ. இ. புனைகதைத் துறையிலேயே சிறப்பாகப் பிரகாசிக்கிறார். பழைமையில் காலூன்றி நின்று புதுமையைப் படைக்க வேண்டும் என்று கூறும் இராசரத்தினம் சிறுகதை எழுத்தாளர்கள் குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகிய இலக்கியங்களைப் படிக்க வேண்டும் என்கிறார்.

## இலங்கை மீது....

—6-ம் பக்கத் தொடர்

புறத்தில் (குஜராத்; கராச்சி) குழப்பம் ஏற்பட்டது கவனிக்கத்தக்கது.

தமிழநக்கு ஒரு இராச்சியம் கிடைக்குமா என்பதை ஆராய்ந்த பொழுது செவ்வய்க்கிரகத்தை நாம் மிக நுணுக்கமாக ஆராய வேண்டியுள்ளது. செவ்வாயை சனி கூடினால் செவ்வாய் இழப்பர் என்பது சாஸ்திர வல்லுனர்களின் கூற்று யுத்தகாரகனாகிய செவ்வாய் பெலம் பெற்று பெலயீனமுற்ற சனியைப் பார்க்கிலும் சனி, கேது கூடி செவ்வாயைப் பார்க்கிலும் யுத்தங்கள் ஆரம்பமாகின்றன.

1914 ம் ஆண்டு செவ்வாய் பெலம் பெற்று [ உச்சம் பெற்று ] கேதுவோடு கூடிய சனி பெலயீனமற்ற [ நீசமடைந்த ] நிலையில் ஒருவரை ஒருவர் பார்த்ததினால்தான் முதலாம் யுத்தம் ஆரம்பமாகியது. இந்த முதலாம் யுத்தத்தில் செவ்வாய் உச்சம் பெற்றதினால் தான் மத்திய ரேகையை அண்டியுள்ள நாடுகள் ( மகர, கடக ரேகைக் குட்பட்ட நாடுகள் ) செவ்வாய் பிரதேசங்கள் சுதந்திர கோரிக்கையை முன்வந்து காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட முற்பட்டன.

1939ம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தத்திலும் செவ்வாய் உச்சம் பெற்றதினால்தான் கடகமகரரேகைகளுக்குட் பட்ட செவ்வாயின் ஆதிக்க நாடுகள் சுதந்திரமடைந்தன. இதிலிருந்து நாம் அறியக் கூடியது செவ்வாய் உச்சம் பெற்ற காலங்களில் செவ்வாய் பிரதேசங்கள் ஒற்றுமையும், சுபிட்சமுமடைவதையும், செவ்வாய் நீசமடைய உச்சம் பெற்ற சனி கேது கூடி ஒருவரை ஒருவர் பார்க்க செவ்வாய் பிரதேசங்களில் குழப்பங்களும் அழிவுகளும் பிரிவினைக் கேஷங்களும் தலைதூக்குகின்றன.

தற்போதைய நிலையில் இலங்கை தமிழருக்கு செவ்வாய் நீசமடைந்த நிலையில் உச்சமடைந்த சனி கேது கூடி ஒருவரை ஒருவர் பார்த்தால் விமோசனத்தைக் கொடுக்கும்.

இலங்கை முழுவதும் செவ்வாயின் ஆதிக்கத்தின் கீழ் வருவது சிங்கள மக்களும் செவ்வாயின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

தமிழர்களின் லக்கினம் செவ்வாயின் வீடாகிய மேடமாக வருவது தமிழருக்கும் செவ்வாய்க்குமுள்ள உறவைத் தெட்டத் தெளிவாக காட்டுகிறது அதனால் தான் தமிழர்களின் தெய்வம் முருகன் என்றும் முருகனின் கிரகம் செவ்வாய் என்றும் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

கற்கடகத்தில் செவ்வாய் நீசம் என்றால் கடகராசி பூராவும் நீசமல்ல. கற்கடகத்தில் 28 பாகையில் தான் நீசம் என்பது தான் உண்மை. அதே போல் துலாமில் சனி உச்சம் என்றால் 20 பாகையில் தான் உச்சம்.

செவ்வாய் கற்கடகத்தில் 28 பாகையில் நீசம் அடையும் பொழுது சனி கேது 90 பாகையில் நின்று ஒருவரை ஒருவர் பார்க்கும் பொழுது பல விபரீதங்கள் நடக்கின்றன.

திருக்கணிதப் பஞ்சாங்கத்தின்படி 1985 ம் ஆண்டு ஆகஸ்ட் 25 ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 30 ம் திகதி வரை செவ்வாய் கற்கடகத்தில் 28 ம் பாகையில் கடும் நீசத்தில் நிற்கப் போகிறது அதே சமயம் சனி துலாமில் 28 ம் பாகையில் நிற்கப் போகிறது. அதாவது செவ்வாய்க்கும் சனிக்கும் 90 பாகை வித்தியாசம் செவ்வாய் 4 ம் பார்வையாலும் சனி 10 ம் பார்வையாலும் ஒருவரை ஒருவர் பார்க்கப் போகிறார்கள்.

## நினைவுகள் சாவதில்லை

— கே. கே. மதிவதனன் —

விழிவழிந்தோடும் கண்ணீர்
விரைவினில் காய்ந்து போகும்
உறவினர் ஓல மெல்லாம்
ஒருதினம ஓய்ந்து போகும்
வழியினில் வந்த காலன்
வதையினால் மாண்ட உந்தன்
நினைவுகள் எம்மை விட்டு
நீங்குதல் எந்தக் காலம்?

பெயரினைப் போலே வாழ்ந்து
பெயரொடு புகழைச் சேர்த்து
உயரிய பதவி யாலே
ஊருக்குப் பெருமை சேர்த்து
துயரினில் நின்ற பேர்க்குத்
துணைவனாய் நின்று நாளும்
தூய்மையாய் வாழ்ந்தாய் உன்போல்
காண்பது எந்தக் காலம்?

கடமையே கண்ணாய் நின்றாய்
கண்ணிய வழியிற் சென்றாய்
தடைபல தாண்டி உந்தன்
தகுதியை நிறுத்திக் கொண்டாய்
படைபல உள்ளார் போலும்
பாதையில் நிமிர்ந்து நின்றும்
இடையினில் தவிக்க விட்டாய்
இனி என்றும் துன்பக்காலம்.

"இனம்புரி யாதோர்" என்றோர்
இனம் இந்த ஈழமண்ணில்
தினம்செய்யும் பூசைக் குன்னைத்
திருப்பலி ஆக்கினரோ
உளவள ராத அந்த
உலுத்தரின் வாள்கள் பட்டு
நிலம்புகுந் தாயே உந்தன்
நினைவுகள் சாவ தில்லை.

கடந்தபொன் நாட்க ளெல்லாம்
கனவுகள் போலே ஆக
நடந்தவை யாவும் இங்கு
நெஞ்சினில் பசுமை ஆக
சுடர் ஒளி போலே வாழ்ந்து
சோதியாய் ஆன யேசு
தாசனே உந்தன் ஆத்மா
சாந்தியைக் காண்பதாக.

(சென்ற 15-5-85ல் கடமைக்குச் சென்று திரும்பும் வழியில் நெடுந்தீவுக் கடலில் அகால மரணமடைந்த யாழ் மாவட்ட விலைக் கட்டுப்பாட்டுப் பொறுப்பதிகாரி திரு. எஸ். யேசுதாசனின் நினைவுக் கண்ணீர் அஞ்சலி)

## அனுபவம் வர....

—3-ம் பக்கத் தொடர்

டார்கள். பஸ்சில் பிரயாணம் செய்து கொண்டிருந்த உதவிச் சாரதி மயங்கி பஸ்சுக்குள் விழுந்து விட்டார். அவருக்கு கல் எறி வயிற்றில் பலமாக பட்டுவிட்டது. அவர் துடியாய் துடித்துக் கொண்டிருந்தார். இந்தச் சம்பவத்திற்கு முதல் நாளும் இவருக்கு கல் எறி பட்டு இப்படி வேதனைப்பட்டாராம். பஸ் இந்த கல் எறிகளையும் வாங்கி கண்ணாடிகள் பல உடைந்த நிலையில் நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது.

பஸ் நின்றிருந்தால் பஸ்சில் பிரயாணம் செய்யும் நாம் என்ன பாடு படுவோம் என்று சிந்தித்துப் பார்க்கிறேன். நெடுந்தீவு குமுதினி படகில் நடந்த சோகச் சம்பவம் நினைவுக்கு வருகின்றது.

நான் பஸ்சில் பிரயாணம் செய்பவர்களைப் பார்க்கின்றேன். பேயறைந்தவர்கள் போல இருக்கின்றார்கள் நகைகளை அணிந்து வந்த அந்தப் பெண்ணைப் பார்க்கின்றேன். அவர் தனது கழுத்தில் அணிந்திருந்த நகைகளை கழற்றிக் கொண்டிருந்தார்.

## பாடு தமிழ்....

—3-ம் பக்கத் தொடர்

யும் வசந்த நாளாகும். இந்நாளில் சிவபெருமான் கல்யாண சுந்தரமூர்த்தியாகி தடாத்தகையாயிருந்த மீனாட்சி அம்மனை தேவயைத் திருமணம புரிந்த திருநாள் எனக் கொள்ளப்படுகிறது. இந்நாள் பார்வதி பரமராகிய சிவபெருமானைத் திருமணக் கோலத்தோடு தியானிபபவர்களின் திருமண விரதமாகவும் அனுட்டிக்கப்படுகின்றது.

திருமகள் இவ்விரதத்தை அனுட்டித்து திருமாலின் திருமார்பில வீற்றிருக்கும் தன்மையைப பெற்றார்.

பிரமன் கலைமகளை நாவினிடத்தே வைத்துக் கொண்டு இருக்க தவம் பெற்ற நன்நாளும் இதுவே, என்பது சமய ஆசிரியர்களின் கருத்து.

(அடுத்த வாரம் முடியும்)

---

1985 ம் ஆண்டு ஆகஸ்ட் 25 ம் திகதி தொடக்கம் 30 ம் திகதி வரைக்கும் செவ்வாய் சனி ஒருவரை ஒருவர் பார்ப்பதினால் இலங்கையின் பிரிவினைக்கு வழி வகுக்கும். உடனடியாக பிரிவினை தெரியாவிட்டாலும் 3 மாதத்திற்குள் அதன் பிரதிபலிப்பைக் காணலாம். செவ்வாய் சனி பார்வைகள் யூலை 25 ம திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் மட்டும் பெரும் விபரீதங்களை உண்டாக்கும்.

அந்நிய நாடுகளின் தலையீடு இலங்கையில் ஏற்படுமா என்பதனை ஆராய்ந்த பொழுது 1985 ம் ஆண்டு ஒக்டோபர் 1 ம் திகதி தொடக்கம் 5 ம் திகதி வரை செவ்வாய் இலங்கையின் லக்கினமாகிய கும்பத்தைப் பார்ப்பதினாலும் இலங்கையின் கர்மஸ்தனமாகிய 10 ம் வீட்டில் நிற்ற புரட்சிக் கிரகம் யுரேனஸ்சை 4 ம் பார்வையால் (90 பாகை வித்தியாசம்) பார்ப்பதினாலும் இலங்கையில் திடீர் அரசியல் மாற்றம் ஏற்படக் கூடிய சாத்தியம் உண்டு.

1985 ம் ஆண்டு ஒக்டோபர் 17 ம திகதி கன்னி ராசியில் பிரவேசிக்க (கன்னி ராசி இந்தியாவின் லக்கினம் என்பது குறிப்பிடத் தக்கது) செவ்வாயை வியாழ குரு 9 ம் பார்வையால் பார்க்க செவ்வாய் பிரதேசங்களுக்கு சுகம் ஏற்படும் இலங்கையின் லக்கினத்திற்கு கன்னிராசி அட்டமம தமிழரின் லக்கினமான மேடத்திற்கு கன்னிராசி ஆறும் வீடு மேடலக்கினத்திற்கு ஆறும் வீட்டில் செவ்வாய் நிற்பது தமிழநக்கு இந்த காலத்தில் இந்தியா இலங்கை மீது கூடிய கவனம் செலுத்தி தமிழருக்கு நன்மையைச் செய்யும்.

ஈழமுரசு

## அனுராதபுரம் சோதனையில் மின்சார பல்புகள் அபகரிப்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் லொறி ஒன்றில் கொண்டுவரப்பட்ட மின்சார பல்புகள் கேஸ்களுடன் அனுராதபுரம் பகுதியில் சோதனை நடத்தியவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது ஒவ்வொன்றிலும் 240 பல்புகளைக் கொண்ட ஐந்து கேஸ்களே அபகரிக்கப்பட்டதாகவும் இவற்றின் பெறுமதி பத்தாயிரம் ரூபாவிற்கும் அதிகமானதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பகுதிகளில் விநியோகம் செய்வதற்காக பிரதான முகவர் நிறுவனத்திற்கே இவை கொண்டுவரப்பட்டன.

நிதி அமைச்சர் 'றொனி' அறிவிப்பு:

# வட கிழக்கு புனர்வாழ்வு, மலையக அபிவிருத்திக்கு

# நோர்வேயிடம் நிதி உதவி

(நோர்வே)

இலங்கை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இனப் பிரச்சினைகள் சம்பந்தமாக நோர்வே அரசாங்கம்கொண்டிருந்த அச்சத்தை தாம் நீக்கியுள்ளதாக நோர்வேக்கு விஜயம் செய்துள்ள நிதிதிட்டமிடல் அமைச்சர் றொனி டீ மெல் அறிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் தாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பயனாகத் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும், பத்தேசபந்து படையினரின் கெடுபிடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் நோர்வேயில் நிலவிவந்த அபிப்பிராயத்தைத் தாம் நீக்கியுள்ளதாகவும், தொடர்ந்தும் நோர்வே அரசு தனது அபிவிருத்தி உதவியை வழங்குமெனவும், இலங்கை சம்பந்தமாகப் பாதகமான முறையில் பிரசாரங்கள் செய்யப்பட்டபோதும் இரண்டு வருடங்களுக்கான உதவி வழங்கப்பட உள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் புனர் வாழ்விற்காகவும், புனரமைப்பு திட்ட வேலைகளுக்காகவும், தோட்டத் தொழிலாளர்களுக்கிடையே சுகாதாரத்திற்கும் கல்வி நடவடிக்கைகளுக்காகவும் மேலும் நிதியுதவி கிடைக்கவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### உதவி அரசாங்க......

— 1ஆம் பக்கத் தொடர்

அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜீப்பிலிருந்த உதவி அரசாங்க அதிபரும் அவரது சாரதியும் வாவிக்கருகே இறக்கி விடப்பட்டு சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரையில் அவ்விடத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

### மன்னாரில் மற்றொரு..

— 1ஆம் பக்கத் தொடர்

மாதம் இடம்பெற்ற தாக்குதலில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் அமைச்சர் சொன்னார்.

அடுத்த ஒரு வாரத்தில் வன்செயல்கள் குறைந்துவிடும் எனவும் இலங்கை இந்திய அரசுகளுக்கும் எதிராக எவரும் இச்சூழ்நிலையில் மோத முடியாது எனவும் அவர் கூறினார்.

### பரந்தன்..

...1ஆம் பக்கத் தொடர்

பட்டுள்ளதால் உணவு முத்திரைக்கான பொருட்களைப் பெறமுடியாமல் நுகர்ச்சியாளர்கள் கிளைகள் முன்காத்து நிற்கின்றனர். இவர்களுக்கான உணவு முத்திரைப் பொருட்களை இவ்வாரமே வழங்க ஆரம்பித்தது குறிப்பிடத்தக்கது.

வேலைநிறுத்தத்தை முன்விட்டு ஊழியர்கள் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர். தமது நிலைமையை விபரித்து உருக்கமாக இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### சூடுபட்டு...

— 1ஆம் பக்கத் தொடர்

ரியர் ஒருவர் சீருடையினரால் சுடப்பட்டு படுகாயமடைந்தார்.

நேற்று பிற்பகல் கரடிப் போக்குச் சந்தியில் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோது கரடிப் போக்கில் அமைந்துள்ள சென் திரேசா மகளிர் பாடசாலை ஆசிரியர் திரு. எஸ். ஈஸ்வரமூர்த்தி என்பவர் அவ் வழியால் வரும்போது படுகாயமுற்றார்.

### உதயத்துக்கு .

... 1ஆம் பக்கத் தொடர்

பவனியாக வந்தவர்கள் திடீரெனத் தேடுதல் நடத்தியதாகவும், அப்போது ஐந்து இளைஞர்கள் கைதாகிக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

எமது நாட்டின் பனைவளத்தை

## நாம் பயன்படுத்தாததே இன்றைய நிலைக்கு காரணம்

(கண்டுக்குளி)

''பல நூற்றாண்டு காலமாக எமது முன்னோர்கள் பயன்படுத்தி வந்த பனை வளத்தை எம்மவர்கள் பயன்படுத்தத் தவறியமையே எமது இன்றைய நிலைக்குக்காரணமாகும். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஏற்பட்டு வந்த பல பொருளாதார, சமுதாய மாற்றங்களின் விளைவாகவே பனையின் உபயோகங்கள் பல குறையத் தொடங்கின.''

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. வி. என். சிவராஜா நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பனைவள ஆய்வுக் கருத்தரங்கை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார். இலங்கைப் பனம்பொருள் அபிவிருத்திச் சபையும், யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து இவ் ஆய்வுக் கருத்தரங்கை நடாத்தின. திரு. சிவராஜா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''தற்காலத் தேவைகளையும், நிலைமைகளையும் கவனத்திற்கொண்டே பனைவள அபிவிருத்தியைத்திட்டமிடல் வேண்டும். பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தொழிற்பாடுகளும்: திட்டங்களும் இவற்றினை உள்ளடக்கிய வகையில் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா பேசும் பொழுது ''எமது பனம் பொருளுற்பத்திகள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும்பிரபல்யம் பெறத் தொடங்கியுள்ளன. இவ்வேளையில் எமது மத்தியிலுள்ள நிபுணர்களும், அறிஞர்களும் பனைவள ஆய்வுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்; எமது மக்களின் பொருளாதார வளமாகப் பனை வளம் விளங்குவதால் பல்கலைக் கழக மட்டத்தில் எமது ஆய்வுகளையும், பணிகளையும் முன்வைத்துள்ளோம்'' என்றார்.

கலாநிதி சு. மோகனதாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். பல்கலைக் கழக மாணவர் பிரதிநிதி திரு. க. சுவர்ணராஜா, பனம் பொருள் அபிவிருத்திச் சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சோ. கோகுலதாசன் ஆகியோரும் உரையாற்றினர். ஆய்வுக் கருத்தரங்கு தொடர்ந்து நடைபெற்றது.

அனுராவுக்கு ஜனாதிபதி கடிதம்

## சகலசிங்களவர்களும்பழைய இடங்களில் குடியேறுவர்!

எந்த ஒரு அரசியல் உடன்படிக்கையும் செயற்படுத்தத் தொடங்குமுன்னர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியசகலசிங்களவர்களையும் மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதமொன்றிற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்து வெளியேறியவர்களும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

### மன்னாரில்...

... 1ஆம் பக்கத் தொடர்

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் வெடி மருந்துகளும் மன்னார் பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது கைப்பற்றப்பட்டவை எனவும் இங்கு மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### மாநகர ,.

... 1ஆம் பக்கத் தொடர்

காப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததால் கொழும்பில் நிறுத்தப்பட்டிருந்தது.

தற்காலிகமான இவ் இயந்திரம் நல்லூர் இந்து விடுதி வளவிற்குள் நிறுத்தப்பட்டுள்ளது. நேற்று மாலை ஐந்து மணிக்கு தீயணைக்கும் இயந்திரம் நல்லூரை வந்தடைந்ததும், மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் நல்லூர் கந்தசாமி கோவிலில் அர்ச்சனை செய்வித்து இயந்திரத்தைப் பொறுப்பேற்றார். மாநகர சபையின் குறிப்பிட்ட சில ஊழியர்களுக்கு விரைவில் தீயணைக்கும் வேலையில் பயிற்சி வழங்கப்படுமென ஆணையாளர் தெரிவித்தார்.

## கல்வீச்சும் பஸ்சேவையும்

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு தொடர்ச்சியாக கல்வீச்சுச் சம்பவங்கள் இடம் பெறுகின்ற போதிலும் அநேக பஸ்கள் நேற்றும் தமது சேவையை வழமைபோல் நடத்தின.

பெரும்பாலான பஸ்களுக்கு அடுத்த சில தினங்களுக்கு ஆசனம் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ்கள்பல இப்பொழுது கல் வீச்சிலிருந்து தப்புவதற்காக 'பாதுகாப்பு வலை'களை முன், பின்பக்க ஜன்னல்களிற்கும் பொருத்தியிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.


தரமான

தங்க - வைர நகைகளை



எண்ணம் போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



நல்ல சேதிகள்

குடுகுடு குடுகுடு! குடுகுடு குடுகுடு!

நல்லசேதிகள் போகுது! நல்லசேதிகள் பொகுது!
நல்லசேதிகள் வருகுது! நல்லசேதிகள் வருகுது!

குளோபல் வழி போகுது! குளோபல் வழி வருகுது!

இரவுபகல் இருபத்தினலுமணி நேரமும்
உடனுக்குடனே போகுது! உடனுக்குடனே வருகுது!
உள்ளபடி நல்லசேவை உபசரிப்பும் உள்ளன்போடு!
வெளிநாட்டுச் சேதிகேட்க, உள்நாட்டுச் சேதி சொல்ல,
செல்லடியம்மா குளோபலுக்கு சொல்லடியம்மா குளோபலுக்கு!
குடுகுடு குடுகுடு குளோபலுக்கு குடுகுடு!
குடுகுடு குடுகுடு குளோபலுக்கு குடுகுடு!

(மகாகவி பாரதியார் மன்னிப்பாராக.)

குளோபல் - இலங்கை அரச தொலைத்தொடர்பு திணைக்களத்தின்
அங்கீகாரம்பெற்ற ரெலெக்ஸ் - ரெலிபோன் சேவையாளர்கள்


''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 16-6-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; தொலைபேசி: 23336